fidh

Fédération internationale des ligues des droits de l'Homme
International federation for human rights
Federacion international de los derechos humanos
الفدرالية الدولية لحقوق الانسان

Law & Society Trust (LST)

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான கூட்டணி (CICC)யுடன் இணைந்து

# அறிக்கை

## சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நிகழ்ச்சித்திட்டம்

# இலங்கையில் நீதியின் தேடல்: கொடூரமான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுக்குட்பட்டோருக்கான தேசிய மற்றும் சர்வதேச தீர்வுகள்

கொழும்பு, இலங்கை – 15-16, யூலை 2006


முன்னுரை.................................................. 2

அறிமுகம் மற்றும் தொடக்க கூற்று.................................................. 6

ICC தொடர்பாக ஒரு சுருக்க அறிமுகம் .................................................. 9

அமர்வு 1: இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டம் .................................................. 15

அமர்வு 2: சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உலகலாவிய சர்வதேச நியாயாதிக்கத்திற்கான அறிமுகம் .................................................. 28

அமர்வு 3: பாதிக்கப்பட்டோரினது உரிமைகள்/ தீர்வுகள்: IIC, கொடூரமான மனித உரிமை மீறல்களுக்குட்பட்டோருக்கான தேசிய மற்றும் சர்வதேச தீர்வுகள் .................................................. 34

அமர்வு 4: இலங்கை ICC நியதிச்சட்டத்தை வலுவாக்குவது தொடர்பான சவால்கள் .................................................. 36

இறுதி குறிப்புகள் மற்றும் தொடரப்படவேண்டிய விடயங்கள்.................................................. 37

இணைப்புகள் .................................................. 39



இல 467/2 – யனவரி 2007

# முன்னுரை

**FIDH மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்(ICC)**

1998 தொடக்கம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான நியதிச்சட்டம் சம்பந்தமான உரோமில் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை அடுத்து சர்வதேச மனித உரிமைகளுக்கான கூட்டமைப்பானது, பாதிக்கப்பட்டோரது மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு ஒரு சுதந்திரமான, பாரபட்சமற்ற முறையிலான ICCயின் நடைமுறைப்படுத்தலிற்காக இயங்கியது. இந்த இக்கோட்பாடுகளின் பாதுகாப்பிற்காக இந்நடைமுறைப்படுத்தல் செயன்முறையில் FIDH தொடர்ந்து செயற்பட்டது.

சர்வதேச சட்டத்தினை மீறும் வகையில் நடாத்தப்படுகின்ற குற்றங்களுக்குள்ள தண்டனையிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தலிற்கு எதிராக நடைபெறும் போராட்டங்களுக்காக பாவனைக்குட்படுத்தக்கூடிய ஒரு பயனுறுதிவாய்ந்த கருவியாக ICCஐ உருமாற்றும் செயற்பாட்டில் FIDH தற்போது ஈடுபட்டுள்ளது.

**FIDH இன் ICC நிகழ்ச்சி**

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட FIDH நிகழ்ச்சி – ''குற்றங்களுக்குள்ள தண்டனையிலிருந்து விலக்கப்பட்டிருத்திலிற்கு எதிரான போராட்டம் மற்றும் சர்வதேச நீதியின் அபிவிருத்தி'' - ஒரு முன்னுரிமை மிக்க நோக்கை கொண்டுள்ளது: மனித உரிமை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பயிற்சியளிப்பதும், மனித உரிமையை பாதுகாப்பதற்கான திறமையை மீளுறுதி செய்வதும் ஆகும். மனித உரிமைகள் மீது இழைக்கப்படும் பாரதூரமான குற்றங்களுக்கு கொடுக்கப்படும் தண்டனையிலிருந்து விலக்கப்பட்டிருத்தலிற்கு எதிரான போராட்டத்தை ஊக்குவிக்க, தற்போது காணப்படுகின்ற உதவிபுரியும் செயன்முறைகளை இறுதியாக பாவனைக்குட்படுத்தும் நோக்கை அடையும் அனுமதியினை இந்நிறுவனங்கள் பெறுகின்றன. இவ்வாறான செயன்முறைகளுள் முக்கியமானதாக ICC காணப்படுகிறது. இந்நிகழச்சித்திட்டம் ஐரோப்பிய ஆணைக்குழுவின் (ஜனநாயகத்திற்கும் மனித உரிமைக்குமான ஐரோப்பிய முன்னெடுப்பு) உதவியின் பயனைப் பெறுகின்றது.

ICCஇன் நியதிச்சட்டத்தின் பிரபஞ்ச உடன்பாட்டு செயல் அமைப்பை FIDH, ஆசிய, வட ஆபிரிக்க, மற்றும் மத்திய ஆசியா போன்ற பிராந்தியங்களில் நியதிச்சட்டத்தை உறுதிப்படுத்திய நாடுகளில் மாத்திரமே நடவடிக்கைகளை மையப்படுத்த தேர்ந்தெடுத்துள்ளது. இந்நோக்கங்களினை ஆதரிக்கும் முகமாக, FIDH குறிப்பிட்ட நாடுகளிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து வட்ட மேசை மாநாடுகள் உட்பட சர்வதேச பணிக்குழு விஜயங்கள் மற்றும் ஏனைய கள செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றது.

**சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அற நிலையம் (LST)**

சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அற நிலையமானது, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், பொருளாதார, கலாச்சார உரிமைகளுடன் நீதிக்கான சமத்துவ அணுகல் சம்பந்தமான பொது விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமாகும். நீதியான சமூகத்தின் அறிவாற்றலை கவனத்திற்குட்படுத்துவதற்கும், அதனை முன்னேற்றுவதற்கும் இந்நிலையமானது கவனம் செலுத்துகின்றது. மேலும் இந்நிலையமானது, மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சிறுபான்மையினங்களின் பாதுகாப்பு தொடர்பிலான கேள்விகள் மீது, தெற்காசியாவிற்குள் அரசாங்கத்திற்கும், சமூகத்திற்குமிடையிலான கூட்டுறவினை ஊக்குவிப்பதிலும் மற்றும் உலக புத்திஜீவித்தனம் மற்றும் கொள்கை நிகழ்ச்சி நிரல்களின் அபிவிருத்தி சம்பந்தமான முன்னெடுப்பதிலும் பங்களிப்புச் செலுத்துகின்றது.

1982ம் ஆண்டில், கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்ட சட்டத்திற்கும், சமூகத்திற்குமான அறிநிலையம் சட்டம் தொடர்பான கல்வியையும், செயல்பாடுகளையும் முன்னெடுத்ததோடு, இது 1982 இன் கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1992 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்டது.

நிலையமானது, சமூகத்திற்குள் மேலும் அர்த்தமுள்ள வகையில் சட்டத்தினை செயற்படுத்தும் முயற்சிகளைத் தூண்டும் நோக்கோடு அதன் செயற்பாடுகளை, நிகழ்ச்சிகளை, ஆணைக்குழு சார்ந்த கல்விகளை, வெளியீடுகளை வடிவமைத்திருக்கிறது. குறைந்த அபிவிருத்தி மற்றும் வறுமை ஆகியவற்றிற்கு எதிரான

போராட்டத்திற்கு சட்டத்தை ஒரு வளமாக பயன்படுத்துவதை நிலையம் ஒரு நோக்காக கொண்டுள்ளதோடு சட்டத்தை சமூக மாற்றத்திற்கான கருவியாக பயன்படுத்தி நீதிச்செயற்பாடுகளின் அணுகலை மேம்படுத்துவதற்கும், சட்ட சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் பல நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது.

நிலையம், சமூக, பொருளாதார உரிமைகள் மற்றும் உலகமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம், மனித உரிமைகளும், முரண்பாடுகளும் நிகழ்ச்சித்திட்டம், மற்றும் சட்ட ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம் என மூன்று நிகழ்ச்சித்திட்டங்களாக வகுத்து செயற்பாடுகளை முன்னெ முன்னெடுத்துச்செல்கின்றது.

## உள்ளடக்கம்


**முன்னுரை........................................................................................................... 02**

**சொற் சுருக்கங்கள்.......................................................................................................... 05**

**அறிமுகம் மற்றும் தொடக்க கூற்று.......................................................................................... 06**

**ICC தொடர்பாக ஒரு சுருக்க அறிமுகம் .................................................................................... 09**

**அமர்வு 1: இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டம்**

பகுதி I.......................................................................................................... 15

- சர்வதேச மனித உரிமை செயன்முறைகள்: மனித உரிமைகளின் உலகலாவிய பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (ICCPR), பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம்
- இலங்கை அரசியலமைப்பின் கீழுள்ள அடிப்படை உரிமைகள்

பகுதி II.......................................................................................................... 16

- இலங்கையில் துன்புறுத்தலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தீர்வுகள்: துன்புறுத்தலிற்கு எதிரான ஐ.நா சமவாயமும் இலங்கையில் அதன் செயற்பாடும்

பகுதி III.......................................................................................................... 19

- சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் முக்கிய செயன்முறைகளும், தராதரங்களும் (1949 இன் ஜெனிவா சமவாயங்கள், 1977 இன் மேலதிக வரைவேடுகள்); இலங்கையில் இவற்றின் வலுவாக்கலும், நடைமுறைப்படுத்தலும்.

கலந்துரையாடல் .................................................................................................. 26

**அமர்வு 2: சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உலகலாவிய சர்வதேச நியாயாதிக்கத்திற்கான அறிமுகம்**

பகுதி I.......................................................................................................... 28

- ICC தொடர்பான வரலாற்று மீளாய்வு

பகுதி II.......................................................................................................... 28

- ICC இனது கட்டுமான அமைப்பு (நியாயாதிக்கம், ஈடுசெய் தன்மை மற்றும் விசை செயன்முறை)
- ICC இன் நியாயாதிக்கத்திற்குள் காணப்படும் குற்றங்கள் மற்றும் குற்றவியல் சட்டத்தின் பொது அடிப்படைகள்
- உலகலாவிய சர்வதேச நியாயாதிக்க செயன்முறையினை பாவனைக்குட்படுத்துதல்: FIDH இன் அனுபவம்

**அமர்வு 3: பாதிக்கப்பட்டோரினது உரிமைகள்/ தீர்வுகள்: IIC, கொடூரமான மனித உரிமை மீறல்களுக்குட்பட்டோருக்கான தேசிய மற்றும் சர்வதேச தீர்வுகள்**

பகுதி I.......................................................................................................... 34

- ICC இன் முன் பாதிக்கப்பட்டவர்களினதும், சாட்சிகளினதும் நிலை சம்பந்தமான மீளாய்வு

பகுதி II.......................................................................................................... 34

- சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சட்டத்தின் முன்னேற்றங்கள் மற்றும் இலங்கையின் செயற்பாடுகளில் அதன் தொடர்புகள்

**அமர்வு 4: இலங்கை ICC நியதிச்சட்டத்தை வலுவாக்குவது தொடர்பான சவால்கள்**

- ICC நியதிச்சட்டத்தின் வலுவாக்கல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான பிராந்திய நிலைப்பாடு.................... 36
- இலங்கையில் ICC நியதிச்சட்டத்தை வலுவாக்குவதிலுள்ள அரசியல் மற்றும் சட்டச் சவால்கள்: முகம்கொடுக்க வேண்டிய சில தடைகள்: ஐக்கிய நாடுகள் மற்றும் இலங்கைக்கிடையிலுள்ள தண்டனை விலக்கீட்டு இருபடை ஒப்பந்தங்கள் .................................................................................... 36

கலந்துரையாடல் .................................................................................................. 36

**இறுதி குறிப்புகள் மற்றும் தொடரப்படவேண்டிய விடயங்கள்.................................................................. 37**

**இணைப்புகள் ...................................................................................................... 39**

## சொற் சுருக்கம்

ASP – அரச கட்சிகளின் பேரவை
BIA - இருபடை தண்டனை விலக்கீட்டு ஒப்பந்தம்
CAT – துன்புறுத்தல் மற்றும் வேறு கொடுமைகளான மனிதாபிமானமற்ற அல்லது இழிபுபடுத்தி நடத்துதல் அல்லது தண்டனைகளுக்கு எதிரான சமவாயம்
CICC - சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான கூட்டணி
CSHR – மனித உரிமைகள் கற்கைக்கான நிலையம்
EU – ஐரோப்பிய ஒன்றியம்
FIDH – மனித உரிமைக்கான சர்வதேச கூட்டமைப்பு
HRC – மனித உரிமைகள் சபை (ஐ.நா)
IBA – சர்வதேச சட்டத்தரணிகளின் சங்கம்
ICC – சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்
ICCPR – சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உடன்பாட்டு உறுப்புரை
ICTR – ருவாண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாயசபை
ICTY – யுகொஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாயசபை
IHL – சர்வதேச மனிதாபிமான சட்டம்
LAG – FIDH சட்ட செயற்பாட்டுக் குழு
LST – சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறநிலையம்
NATO – வட அட்லான்டிக் ஒப்பந்த நிறுவனம்
NGO – அரச சார்பற்ற நிறுவனம்
OTP – வழக்குத்தொடருநரின் அலுவலகம்
RS – உரோம நியதிச்சட்டம் - ICC இனது நியதிச்சட்டம்
RPE – ICC இனது சாட்சி மற்றும் நடவடிக்கை முறை சம்பந்தமான விதிகள்
UN – ஐக்கிய நாடுகள் சபை
VTF – பாதிக்கப்பட்டோரினது அற நிதியம்

*இவ்வட்ட மேசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான கூட்டணி (CICC) இனது ஒருங்கிணைப்புடன் இலங்கை நிறுவனமான சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அற நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.*

**இவ்வறிக்கை ஐரோப்பிய ஆணைக்குழுவின் உதவியுடன் மேம்படுத்தப்பட்டது. இங்கு அளிக்கப்பட்ட கருத்துக்கள் பட்டறையில் பங்குபற்றியோரது கருத்துக்கள் என்பதும், எக்காரணத்திற்கும் அது ஐரோப்பிய ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ கருத்தாக கருதப்பட முடியாது.**

## அறிமுகம்

இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு, மனித உரிமை மீறல்களுக்கான (தேசிய, சர்வதேச மற்றும் மனிதாபிமான சட்டம்) தீர்வுகள் சம்பந்தமான செயற்பாட்டளவிலான அறிவினை வழங்குவதற்காகவும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் செயன்முறை மற்றும் கருவிகளை உள்ளடக்கிய இத்தீர்வுகளை எவ்வாறு உகந்தளவில் பாவனைக்குட்படுத்தலாம் என்பதை ஆராய்வதற்காகவும், சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறிநிலையம்(LST) ஆனது, FIDH வின் துணை ஏற்பாட்டின் மூலம், "இலங்கையில் நீதியின் தேடல்: கொடூரமான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுக்குட்பட்டோருக்கான தேசிய மற்றும் சர்வதேச தீர்வுகள்" என்ற தலைப்பிலான ஒரு பட்டறையை 2006 யூலை 15ஆம், 16ஆம், திகதிகளில் கொழும்பில் நடாத்தியது. இப்பட்டறையின் ஒரு குறிக்கோளானது, சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமான சட்டம் மற்றும் இலங்கையின் குற்றவியல் சட்டம் ஆகியவற்றின் முன்னேற்றங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற உத்திகளை உருவாக்குவதாகும்.

சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் இளம் சட்டத்தரணிகள் என கலந்து பங்குபற்றியிருந்தனர். இவர்களில் பெரும்பாலானோருக்கு மனித உரிமை தராதரங்களை அணுகுவதற்கான வாய்ப்பு இருந்தபோதிலும் தங்களது செயற்பாடுகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் போக்கு ஆகியவற்றின் இடையில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்கான முயற்சிகளை எடுப்பதற்கான வாய்ப்பினை வழங்கிய முதல் பட்டறையாக இது காணப்பட்டது.

## தொடக்க கூற்று

**மனித உரிமைகளுக்கான சர்வதேச கூட்டமைப்பு (FIDH)**

FIDH, சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறநிலையத்துடனும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான கூட்டணியுடனும் இணைந்து சர்வதேச நீதி என்ற தலைப்பின் கீழ் நடைபெறும் இப்பட்டறைக்கு உங்களை வரவேற்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இரண்டாம் உலக போரின் பின்னர், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நிரந்தரமாக உருவாக்குவதற்கான குரலை எழுப்பிய முதல் சர்வதேச மனித உரிமைகளுக்கான அரச சார்பற்ற நிறுவனமாக FIDH கருதப்படுகின்றது. யுத்த குற்றங்கள், மனித வர்க்கத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனஅழிப்பு என்பவற்றிற்கு காரணமான குற்றவாளிகள் தண்டனையிலிருந்து விலக்கப்படுதலுக்கு எதிராக போராடுவதற்கு உதவும் முறையில் ஒரு நிரந்தர மற்றும் உலகலாவிய முறையிலான ஒரு கருவியினை அரசுகள் ஏற்றுக்கொள்ள வைக்கும் முகமாக, FIDH இன் சர்வதேச சபை 1956 ஆம் ஆண்டில் ஒரு தீர்வினை விடுவித்தது. 1997 ஆம் ஆண்டு தொடக்கம் FIDH உரோம நியதிச்சட்டம் தொடர்பான தீர்வு பேச்சுகளிலும் ஒரு சுதந்திரமான மற்றும் நியாயமான சர்வதேச குற்றவியல் நீதிமன்ற(ICC)த்திற்கான அழுத்தச் செயல்முறைகளிலும் ஈடுபட்டுள்ளது. அன்றுமுதல் 2002, யூலை 1 இல் அமுலுக்கு வந்த இப்புதிய செயன்முறையினை பற்றியும் ICC ஐ உலகலாவிய முறையில் ஏற்றுக்கொள்வதற்கான செயற்திறனுடன் கூடிய ஊக்குவிப்பினை வழங்கும் நோக்கத்துடனும் தேசிய சிவில் சமூகத்திற்கு பிராந்திய மற்றும் தேசிய பட்டறைகளை உலகெங்கும் FIDH நடாத்தி வந்துள்ளது.

ICC பிரபஞ்ச தன்மையை பெற இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டும். லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பிய கண்டங்கள் உரோம நியதிச்சட்டத்தை வலுவாக்கி மொத்தத்தில் 100 அரச கட்சிகளாக இன்று காணப்பட்டபோதிலும், ஆசிய மற்றும் மத்திய ஆசிய; வட ஆபிரிக்க பிராந்தியங்கள் இன்னும் குறை காணும்படி பிரதிநிதித்துவப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன் இக்காரணத்திற்காக மத்திய ஆசியா மற்றும் வட ஆபிரிக்காவில் சிவில் சமூகத்தின் மத்தியில் ICC தொடர்பில் விழிப்புணர்வை உண்டு பண்ணுவதில் FIDH தனது சக்திகளை மையப்படுத்தியது. ஆசியாவிலுள்ள 24 நாடுகளில் 5 (ஆப்கானிஸ்தான், கம்போடியா, மொங்கோலியா, கொரிய குடியரசு மற்றும் திமோர்-லெஸ்டே) நாடுகள் மட்டுமே உரோம நியதிச்சட்டத்தை வலுவாக்கியுள்ளது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் FIDH ஆனது தேசியப் பட்டறைகளை கம்போடியா மற்றும் ஜெமன், பஹறெயின், துனிசியா, மொரொக்கோ, லெபனன், ஜோர்தானில் ஈராக்கிய சட்டத்தரணிகளுக்கு, சூடான் மற்றும் துருக்கி மற்றும் ஆரம்பக்கட்ட சந்திப்புக்களை இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானிலும் நடாத்தியுள்ளது. இந்நிகழ்ச்சியின் கடைசி நடவடிக்கையாக இன்றைய பட்டறை அமைகின்றது.

இலங்கைக்கு சர்வதேச குற்றிவியல் நீதிமன்றம்(ICC) என்ற விடயத்தினை கொண்டுவருவது ஒரு இலகுவான காரியம் இல்லை என்பது FIDH ஆமோதிக்க விரும்புகின்றது.

உரோம நியதிச்சட்டத்தை ஸ்தாபிப்பதற்கு பயன்படுத்திய பொது அடிப்படைகளை ஆதரித்த போதும், வேறு சில காரணங்களோடும் சிறிய தீவு நாடுகளில் முக்கியம் வகிக்கும் பயங்கரவாதம், பணம் தூய்தாக்கல், முறைதவறிய வணிகம் மற்றும் இவ்வாறான வேறு குற்றங்களை நியதிச்சட்டத்திலுள் சேர்க்காததன் காரணத்தால் உரோம நியதிச்சட்டத்தை ஆதரிக்கும் வகையில் வாக்களிப்பதற்கு இலங்கை தவிர்க்கப்பட்டிருந்தது. இதற்கு மேலாக ஈடுசெய்ய அடிப்படைகளின் யதார்த்த முறையிலான பயன்பாடு மற்றும் ICC இனால் அரசசார்பற்ற செயற்பாட்டாளர்களை நடத்துதல் போன்ற கேள்விகள் இலங்கை அரசாங்கத்திற்கு கவனத்திற்குரிய விடயமாக இருக்கின்றது.

இரண்டு தசாப்தங்களிற்கு மேலாக நடைபெற்றுவந்த யுத்தத்தினை, 2002 இல் நடைபெற்ற யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினால் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள சிவில் யுத்த வரலாறு அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. உரோம நியதிச்சட்டத்தினை ஏற்பதற்கு முன்னர் நடந்த பாராதூரமான குற்றங்கள் ICC இன் நியாயாதிக்கத்தின் கீழ் வராதபோதிலும், அதனை ஏற்பதனால் உருவாககூடிய அரசியல் விளைவுகள் தொடர்பாக அரசாங்கம் நுண்ணுணர்வுடன் காணப்படுகின்றது.

FIDH இலங்கையிலுள்ள மனித உரிமை குழுக்களுடனும், பிரபலமான சட்டத்தரணிகளுடனும், இவ்வாறானதொரு பட்டறையினை நடாத்துவதன் தேவையினை பற்றி பல மாதங்களாக கலந்துரையாடி வந்தது. எங்கள் பங்காளியின் அண்மைய உறுதிப்பாட்டிற்கமைய நாங்கள் இப்பட்டறையை ஒழுங்கு செய்வதில் உறுதிக்கொண்டோம். இலங்கையின் சூழ்நிலையில் ICC சம்பந்தமாக நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஒரு கடினமான நீண்ட செயன்முறையாகவே அமையும்.

FIDH கண்மூடித்தனமாக ICCஐ ஆதரிப்பதில் ஈடுபடுவதில்லை, தேசிய நீதிமன்றங்களுக்கு இயலாதவிடத்து அல்லது விரும்பாதவிடத்து தண்டனையிலிருந்து விலக்கப்படுதலிற்கு எதிராக போராடுவதற்காக இன்று காணப்படும் ஒரேயொரு கருவியாக ICC காணப்படுகின்றது என நம்புகின்றோம். முதன்முறையாக பாதிப்புக்குட்படுத்தப்பட்டவர் ஒருவர் சர்வதேச குற்றவியல் நியாயாதிக்கத்தில் ஈடுபடுவதற்கான ஒரு திடமான கருவியாக ICC அமைகின்றது. இந்நீதிமன்றத்தின் முன், ஜனநாயக கொங்கோ குடியரசின் பாதிக்கப்பட்டவர் ஒருவரின் பிரதிநிதியாக முன் வந்த முதல் மற்றும் ஒரேயொரு நிறுவனமாகும். நடைமுறையில் இருக்கும் ஒரு வழக்கில் பாதிக்கப்பட்டோர் பங்குகொள்ள முடியும் என 2006, ஜனவரி 17இல், ICC ஆனது வரலாற்று முக்கியத்துவமிக்க ஒரு தீர்மானத்தை எடுத்தது. வலுவாக்கலிற்கு அழுத்தம் செலுத்துவதோடு முடியுமான தருணங்களில் பாதிக்கப்பட்டோருக்கு காணப்படும் திடமான தீர்வுகளையும் FIDH பாவனைக்குட்படுத்துகின்றது.

இலங்கை ICC இன் கட்சியாளராக இல்லாதவிடத்தும் படுமோசமான குற்றங்களால் பாதிக்கப்பட்டடோருக்கு இம்முக்கியமான கருவியினை பயன்படுத்தி உதவுவதற்கான வழிகள் மிகக் குறைந்தவையே. எனினும் 2005

இன் UNSC தீர்மானமானது, டார்பூர் சூழ்நிலையினை குறிப்பிட்டு ICC வழக்குதொடருநருக்கு ஒரு முக்கிய முன்னுருவினை எடுத்துரைத்துள்ளது. இதனையடுத்து நாங்கள் முகம்கொடுக்கும் சவால்கள் அளவற்றவை, எனினும் இத்தீர்வின் மீது அமெரிக்கா தனது தடுத்து நிறுத்தும் உரிமையினை பாவனைக்குட்படுத்தாதது, தங்களது அரசுகள் உரோம நியதிச்சட்டத்தை வலுவாக்க மறுத்தமையினால் இந்நீதிமன்றத்தினை அணுகுவதற்கு முடியாதிருந்த அனைத்து பாதிப்புக்குட்படுத்தப்பட்டோரிற்கும் ஒரு நம்பிக்கையினை உருவாக்கியுள்ளது.

சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தப்படும் எந்தவொரு அழுத்தத்திற்கும் சமாந்தரமாக தேசிய மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை நடத்துவது அடிப்படையில் முக்கியத்துவம் வகிக்கின்றது என FIDH இன் அனுபவங்கள் எடுத்துரைக்கின்றன; மேலாக ICC இன் ஈடுசெய்யும் தன்மையின் காரணத்தால் இவ்வாறான நிகழ்ச்சிகள் குற்றவியல் சட்டவாக்கத்திற்கான தேசிய சீரமைப்பை ஊக்குவிக்குமொரு காரணியாகவும் காணப்படுகின்றது.

ஆதலால், ICC இற்கான பாதுகாப்பு சபை தீர்ப்பெடுப்பு ஒன்றினை ஆதரிக்கும் முகமாக முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சிக்கு இலங்கை சிவில் சமூகம், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஈடுபாடுள்ள அரசுகளும் கைகோர்த்து பலத்த ஆதரவினை வழங்குவது அவசியம் என நம்புகின்றோம். இதேவேளை சமாந்திரமாக உரோம நியதிச்சட்டத்தினை இலங்கை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் ஒரு அழுத்த முயற்சி நடைபெறுதல் அவசியம் எனவும் கூறிக்கொள்கிறோம்.

## ICC சம்பந்தமான சுருக்கமான ஒரு அறிமுகம்

**1 - வரலாற்று மீளாய்வு**

1998, யூலை 17 ஆம் திகதி அன்று 120 அரசுகள், மிக பெரியளவில் நிரந்தரமான மற்றும் சுதந்திரமான ஒரு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை (ICC) ஸ்தாபிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை அங்கீகரித்தனர். நான்கு வருடங்களின் பின்னர், 2002 ஏப்ரல் 11ஆம் திகதி அன்று 60 ஆம் வலுவாக்கலை அடுத்து, ICC இனது உரோம நியதிச்சட்டம் (RS) அமுலுக்கு வந்தது. 2002 யூலை 1ஆம் திகதி அன்று தனிநபர்களை, இனஅழிப்பு, மனித வர்க்கத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்த குற்றங்களிற்காக வழக்குத் தொடர்வதற்கான தகுதியினை ICC பெற்றது.

“உரோமிற்கான பாதை” ஒரு நீண்ட சர்சைக்குரிய ஒன்றாக அமைந்தது. ஒரு உலக குற்றவியல் நீதிமன்றத்தை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகள் 19 ஆம் நூற்றாண்டு காலங்களின் சுவடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஸ்தாபகர் ஒருவராகிய குஸ்தவ் மொய்நியோவால் பிரன்கோ-புருஸ்சியன் யுத்தத்தில் நடந்த குற்றங்களிற்கு பதிலாக ஒரு நிரந்தர நீதிமன்றத்திற்கான முன்மொழிவினை எடுத்து வைத்ததோடு, இக்கதையானது 1872 ஆம் ஆண்டளவில் ஆரம்பமானது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தை அடுத்து, நட்பு நாடுகள் ஒன்றிணைந்து, அக்சிஸ் (Axis) யுத்த குற்றவாளிகளை வழக்குக்குட்படுத்தும் நோக்கோடு நிவ்ரம்பர்க் (Nuremburg) மற்றும் டோக்கியோ நியாயசபைகளை ஸ்தாபித்தனர். குளிர்கால யுத்தத்தையடுத்து, 50 வருடங்கள் கடந்த பின்னரே உலக தலைவர்கள் தங்களது நிகழ்ச்சி நிரலில் ICCஐ மீண்டும் அறிமுகப்படுத்தினர்.

எவ்வாறாயினும், 90 ஆம் ஆண்டுகளில் சர்வதேச மற்றும் தேசிய கூட்டங்களின் பலவகை நியாயசபைகளை பயன்படுத்துவதன் மூலம் சர்வதேச குற்றவியல் நீதி செயன்முறையை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள், ஐ.நா பாதுகாப்பு சபையினால், 1993 இல் முன்னாள் யுகொஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாயசபை (ICTY) மற்றும் 1994 இல் ருவாண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாயசபை அத்துடன் சியேரா லியோனுக்கான விசேட நியாயசபை, கம்போடியாவில் கமேர் ரூஜ் நியாயசபை மற்றும் கிழக்கு திமோரிற்கான நியாயசபை போன்ற கலப்பின நியாயசபைகள் உருவாக்கப்பட்டதை அடுத்து ஏற்படுத்தப்பட்டன.

**2 – தேசிய நீதிக்கு ஈடுகொடுப்பதாகவும் நிரந்தரமாகவும் ICC காணப்படுகின்றது**

**நிரந்தர நியாயாதிக்கம்**

1991 – 1993ஆம் ஆண்டுகளுக்கிடையில் முன்னாள் யுகொஸ்லாவியா மற்றும் 1994 இல் ருவாண்டா, அத்துடன் கலப்பின நியாயசபைகள் போன்ற வேளைக்கேற்ப உருவாக்கப்படும் நியாயசபைகள் உள்ளக குற்றங்கள் மீது கொண்டுள்ள நியாயாதிக்கம் போன்றல்லாது, ICC ஆனது உரோம நியதிச்சட்டம் 2002 யூலை 1 இல் அமுலுக்கு வந்தது தொடக்கம் நடந்த அனைத்து குற்றங்கள் மீதும் நியாயாதிக்கம் கொண்டுள்ளது. இத்திகதியிற்கு முன்னர் நடந்த குற்றங்களின் மேல் நியாயாதிக்கம் இல்லாது, பின்னோக்கிச் செயற்படும் நியாயாதிக்கத்தை ICC இற்கு கொள்ள இயலாது.

**ஈடுசெய் நியாயாதிக்கம்**

ICC ஆனது ஒரு ஈடுசெய் நியாயாதிக்கமாக விளங்குவதோடு தேசிய நீதிமன்றங்களை மாற்றீடு செய்வதாக காணப்படமாட்டாது. அரசு வழக்குத்தொடர மறுக்கும் அல்லது உண்மையில் வழக்குத்தொடர முடியாத தருணத்தில் **மட்டுமே** ICC ஆராய முன்வரும். (உதாரணமாக: நியாயமற்ற முறையில் நடவடிக்கைகள் தாமதிக்கப்படுமாயின், அல்லது நபர்களை குற்ற பொறுப்பிலிருந்து காப்பாற்றும் வகையில் மட்டுமே நடவடிக்கைகள் நடாத்தப்படும் சந்தர்ப்பங்களில் ஆகும்.)

**3 – ICC இற்கு ஒரு சூழ்நிலையை எவ்வாறு குறிப்பிட்டு காட்டலாம்**

ICC வழக்குதொடருநருக்கு, ஒரு சூழ்நிலையை மூன்று வழிகளில் குறிப்பிட்டுக் காண்பிக்கலாம்:

- **அரசு தரப்பு** குறிப்பிட்டு காட்டல். ஒரு சூழ்நிலையை நீதிமன்றத்திற்கு குறிப்பிட்டு காண்பிப்பதன் மூலம் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை ஒரு அரச சார்பற்ற தரப்பினர் ஏற்றுக்கொள்ளலாம்.
- ஐ.நா சிறப்புரிமைப் பத்திரத்தின் அத்தியாயம் VII இன் கீழ் ஐ.நா **பாதுகாப்பு சபையை** குறிப்பிட்டுக்காட்டல்
- ஒருவர் தனது சொந்த உடன்பாட்டுடன்(propio motu) மீயுரிமையின் படி விசாரணை செய்வதற்கான 'ஏற்கக்கூடிய அளவிலான' ஒரு அடிப்படை இருக்குமென நம்பும் ஒரு விசாரணையை குறிப்பிட முடிவெடுக்கும் நபருக்கு, ஒரு சூழ்நிலையை வழக்கு தொடுநருக்கு சுட்டிக்காட்டுவதற்கு இயலும். இவ்விசாரணையை தொடர்வதற்கு முன்னர் அவர் 'விளக்க முன் அவையிடமிருந்து' அங்கீகாரம் பெறல் அவசியம்.

**4 – ICC இனது நியாயாதிக்கம்**

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது, உரோம நியதிச்சட்டத்தின் கீழ் ICC இற்கு **தனிநபர்களுக்கு** எதிராக வழக்குத்தொடர்பதற்கான நியாயாதிக்கத்தை கொண்டுள்ளது:

- உரோம நியதிச்சட்டத்தை அமுலுக்குட்படுத்திய ஒரு அரசின் **ஆட்சி எல்லைக்குள்** நடந்த ஒரு குற்றவியல் சம்பவம்
- உரோம நியதிச்சட்டத்தை அமுலுக்குட்படுத்திய அல்லது வேளைக்கேற்ப முறையில் குறிப்பிட்டுள்ள ஒரு அரசின் **பிரஜையால்** இழைக்கப்பட்ட குற்றம்
- பாதுகாப்பு சபை ஒரு சம்பவத்தை ICC இற்கு குறிப்பிடுமாயின் இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் முற்றிலும் உலகலாவியதாக அமைகின்றது. அதாவது, குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு அரச தரப்பினரின் பிரஜையாகவோ அல்லது குற்றவியல் சம்பவம் ஒரு அரச தரப்பினரது ஆட்சி எல்லைக்குள் நடாத்தப்பட்டதொன்றாக இருத்தல் அவசியமற்றது.

**2002, யூலை 1** ஆம் திகதி தொடக்கம் நீதிமன்றமானது, இனஅழிப்பு, மனித வர்க்கத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்த குற்றங்களின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ளது. வலுத்தாக்கல் என்ற குற்றத்திற்கு மேலான நியாயாதிக்கத்தை, நீதிமன்றமானது அக்குற்றத்தின் வரைவிலக்கணம் சம்பந்தமாக முடிவெடுத்ததன் பின்னரே நியாயாதிக்க சக்தியினை அதன் பிரகாரம் பாவனைக்குட்படுத்தும்.

யூலை 2002 இற்கு பின்னர் ஒரு அரசு உரோம நியதிச்சட்டத்தின் ஒரு கட்சியாளராக மாறுமாயின், இவ்வரசு தனது கருவிகளை வலுவாக்கலுக்கு வைப்பீடு செய்து **60 நாட்கள்** சென்ற பின்னரே உரோம நியதிச்சட்டம் அமுலாக்கப்படலாம்.

**5 - ICC நியதிச்சட்டத்தால் வரைவிலக்கணத்திற்குட்பட்டுள்ள குற்றச்செயல்கள்**

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்படும் குற்றச்செயல்கள் எவை? ICC ஆனது சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டம் ஆகியவற்றின் பாராதூரமான மீறல்கள் மீது ICC நியாயாதிக்கம் கொண்டுள்ளது: அதாவது இனஅழிப்பு, மனித வர்க்கத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள்.

**இனஅழிப்பு (RS இன் உறுப்புரை 6)**
இனஅழிப்பு என்ற பதத்தின் விளக்கமானது 1948 இன் இனஅழிப்பு சமவாயத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. முழுமையான அல்லது பகுதியாக ஒரு தேசிய, இன, சாதி அல்லது மதக் குழுவை அழிக்கும் முகமாக நடாத்தப்பட்ட, பின்வரும் ஏதேனும் ஒரு செயலைக் குறிக்கும்:

- அக்குழுவின் அங்கத்தவரை கொலை செய்தல்
- அக்குழுவின் அங்கத்தவருக்கு பாரிய உடல் மற்றும் மன ரீதயான தீங்கு விளைவித்தல்
- திட்டமிட்ட வாழ்கைநிலையினை அக்குழு மீது வலுக்கட்டாயமாக புகுத்துவதனால் ஏற்படுத்தும் முழுமையான அல்லது ஒரு பகுதியிலான, உடல் ரீதியான அழிவு
- அக்குழுவில் பிறப்புகள் ஏற்படுவதை தவிர்க்கும் நோக்குடன் வலுக்கட்டாயமான சில நடவடிக்கைகளை எடுத்தல்
- அக்குழுவிலுள்ள பிள்ளைகளை வலுக்கட்டாயமாக இன்னொருக் குழுக்கு மாற்றுதல்

**மனித வர்க்கத்திற்கு எதிரான குற்றங்கள் (RS இன் உறுப்புரை 7)**
உரோம நியதிச்சட்டம், மனித வர்க்கத்திற்கு எதிரான குற்றங்களை கோவைப்படுத்தும் முதல் சர்வதேச சமவாயமாகும். மனித வர்க்கத்திற்கு எதிரான குற்றங்கள், பின்வரும் செயல்களை உள்ளடக்கிய, ஏதேனுமொரு சிவில் சனத்தொகை மீது, தாக்குதல் பற்றிய முன்னறிவிப்புடன், பாரியளவில் அல்லது திட்டமிட்ட முறையில் செய்யப்படும் தாக்குதலாகும்:

- கொலை
- முற்றாக அழித்தல்
- அடிமையாக்கல்
- சனத்தொகையொன்றை நாடுகடத்தல் அல்லது வலுக்கட்டாயமாக மாற்றல்
- சர்வதேச சட்டத்தின் அடிப்படை சட்டங்களின் மீறலாகிய தடுப்புக்காவல் மற்றும் உடல் சுதந்திரத்தை கடுமையாக அழித்தல்
- துன்புறுத்தல்
- பாலியல் வல்லுறவு, பாலியல் அடிமைத்துவம், கட்டாய விபச்சாரம், பலவந்தமான கருத்தரிப்பு, கட்டாய கருக்கலைப்பு அல்லது பாரிய விளைவுகளை ஈட்டும் வேறு வகையான பாலியல் வன்முறை
- அரசியல், தேசியம், இனம், சாதி, கலாச்சாரம், மதம், பால்நிலை அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் உலகளாவிய முறையில் அனுமதிக்கப்பட முடியாத காரணங்களுக்காக ஒரு குறிப்பிட்ட குழுவொன்றை அல்லது கூட்டாக துன்புறுத்தல்
- பலவந்தமுறையிலான நபர்களின் காணாமல்போதல்
- அபாத்தயிட் (வெள்ளையினரையும் மற்றைய இனத்தவரையும் பிரிக்கும் கொள்கை) எனும் குற்றம்
- இதைபோன்ற, மனிதாபிமானமற்ற முறையில், பாரிய கஷ்டத்தை வலுக்கட்டாயமாக உருவாக்குதல் அல்லது கடுமையான உடல் காயங்களை ஏற்படுத்துதல் அல்லது மன, உடலியல் சுகாதாரத்திற்கான பாதிப்பபை ஏற்படுத்தல்.(...)

**யுத்தக் குற்றங்கள் (RS இன் உறுப்புரை 8)**
உரோம நியதிச்சட்டத்தின் பிரகாரம், ஒரு நபரின் மீதோ அல்லது ஒரு சொத்தின் மீதோ இழைக்கப்படும், 1949, ஆகஸ்ட் 12இல் உருவாக்கப்பட்ட ஜெனிவா உடன்படிக்கையினை மீறும் பின்வரும் குற்றங்கள் எவையேனும் யுத்தக் குற்றம் எனப்படும்.

- முன்னேற்பாடான கொலைகள்
- துன்புறுத்தல் அல்லது உயிரியல் பரிசோதனைகளை உள்ளடக்கிய, மனிதாபிமற்ற முறையில் நடாத்துதல்
- முன்னேற்பாடான முறையில் உடல் மற்றும் சுகாதாரத்திற்கு பாரிய துன்புறுத்தல் அல்லது காயம் ஏற்படுத்தல்
- இராணுவ தேவைக்கின்றி, நீதியற்ற மற்றும் தன்னிச்சையான முறையில், சொத்துக்களை பாரிய அழிவிற்குட்படுத்தல் அல்லது பறிமுதல் செய்தல்.
- ஒரு விரோத சக்தியின் படையில் சேவை செய்யவதற்கு ஒரு யுத்த கைதியை அல்லது பாதுகாப்பிலுள்ள நபரை வற்புறுத்தல்
- ஒரு யுத்த கைதியை அல்லது பாதுகாப்பிலுள்ள நபரை முன்னேற்பாடான முறையில் ஒரு நீதியான, நேர்மையான விசாரணைக்குள்ளாகுவதற்கு மறுத்தல்
- நீதியற்ற நாடுகடத்தல் அல்லது இடம் மாற்றுதல் அல்லது நீதியற்ற முறையில் மறைத்து வைத்தல்
- பணயக் கைதியாக வைத்திருத்தல்

ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச சட்டத்தின் கட்டமைப்புக்கள் பிரயோகத்திற்குள்ளாக்கப்படும் சட்டங்களையும் வழக்கங்களையும் பாரிய மீறல்களுக்குட்படுத்துவதற்கு மேலாகவும் நீதிமன்றமானது நியாயாதிக்கம் கொண்டுள்ளதை யுத்தக் குற்றங்களின் வரைவிலக்கனம் உள்ளடக்குகின்றது. இம் மீறல்கள், உரோம நியதிச்சட்டத்தின் உறுப்புரை 8, உப பந்தி (b) யில் வெகு ஆழமாக விளக்கப்பட்டுள்ளது. சர்வதேச பாத்திரத்திற்கு அப்பாற்பட்ட ஒரு ஆயுத முரண்பாட்டின் போது, 1949, ஆகஸ்ட் 12 இன் நான்கு ஜெனிவா சமவாயங்களினதும் உறுப்புரை 3 இன் மீறல்களை, நீதிமன்ற நியாயாதிக்கம் உள்ளடக்கும்.

**வலுத்தாக்கல் (aggression) என்ற குற்றம்**
2009 இல் நடாத்தப்படவுள்ள மீளாய்பு மாநாட்டில் வலுத்தாக்கல் என்ற குற்றத்தின் வரைவிலக்கணத்தை கொண்ட ஏற்பாடானது ஆதரிக்கப்பட்டதன் பின்னரே, நீதிமன்றமானது இக்குற்றத்தின் மீதான நியாயாதிக்கத்தை செயற்படுத்த முடியும்.

**ICC இனது பிரயோக சட்டம்** (அதன் மூலங்கள்) அடிப்படையாக உரோம நியாயாதிக்கம (RS), குற்றங்களின் அடிப்படைகள் மற்றும் ஆதாரம் மற்றும் நடவடிக்கைமுறை என்பவற்றின் விதிகள் (RPE) (உறுப்புரை 21), காணப்படுகின்றன.

**6 – குற்றவியல் நீதியின் பொது அடிப்படைகள்**

**தனிநபர் குற்றவியல் பொறுப்பு (RS இன் உறுப்புரை 25)**
ICC இன் நியாயாதிக்கம் தனிநபர்கள் மீது மட்டுமே உள்ளதை தவிர சட்ட உள்பொருளுக்கு அதாவது பல்தேசிய அல்லது கூட்டுத்தாபனங்களின் மேல் நியாயாதிக்கம் அற்றது.

**ICC இன் நியாயாதிக்கத்திற்கான குறைந்தபட்ச வயது (RS இன் உறுப்புரை 26)**
ICC ஆனது 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் மீது மட்டுமே நியாயாதிக்கம் கொண்டுள்ளது.

**பின்நோக்கிய நியாயாதிக்கம் (RS இன் உறுப்புரை 24)**
இந்நியதிச்சட்டம் அமுலாக்கப்படுவதற்கு முன்னர் நடாத்தப்பட்ட ஏதேனும் ஒரு குற்றத்திற்காக இந்நியதிச்சட்டத்தின் கீழ் எவரையும் குற்றிவியல் பொறுப்புக்கு உள்ளாக்குவது இயலாது.

**உத்தரவிடும் பொறுப்பு (RS இன் உறுப்புரை 28)**
இராணுவ கட்டளை அதிகாரிகள் அல்லது வேறு உயர்பதவி வகிக்கும் அதிகாரிகள் தங்களிற்கு கீழுள்ளோர் குற்றங்களை செய்துள்ளனர் அல்லது செய்கின்றனர் என்று அறிந்திருக்க வேண்டும் என்ற அடிப்படையின் கீழும், அச்செயலினை தடுப்பதற்கு அல்லது செயலின் தாக்கத்தை குறைப்பதற்கான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்ற காரணத்திற்காகவும் மேலும் அக்குற்றச் செயல்கள் தங்களது பயனுறுதிவாய்ந்த பொறுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்குட்பட்டதாக இருந்தது என்பதற்காகவும், ICC யின் நியாயாதிக்கத்தின் கீழ வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படலாம்.

**ந பிஸ் இன் இதெம் - *Ne Bis In Idem* (RS இன் உறுப்புரை 20)**
நீதிமன்றத்தால் வழக்கு தொடுக்கப்பட்டு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர், உறுப்புரை 5 இன் கீழ் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு குற்றத்திற்காக எவரேனும் ஒரு நபரை இன்னொரு நீதிமன்றத்தினால் மீண்டும் விசாரணைக்குட்படுத்தல் இயலாது. உறுப்புரை 6,7 அல்லது 8 இன் கீழ் தடுக்கப்பட்ட செயலிற்காக இன்னொரு நீதிமன்றத்தால் எவரேனும் ஒரு நபரை விசாரணைக்குட்படுத்தி தீர்ப்பு வழங்கப்பட்டிருக்குமாயின், மற்றைய நீதிமன்றம் விசாரணைக்குட்பட்டவரை பாதுகாக்கும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டது அல்லது சர்வதேச சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை கோட்பாடுகளுக்கு அமைய சுதந்திரமாகவும் நியாயமான முறையிலும் விசாரணை நடாத்தப்படவில்லை என்ற அடிப்படையில் அன்றி, அதே குற்றத்திற்காக இந்நீதிமன்றம் தனது நியாயாதிக்கத்தை செயற்படுத்துவது இயலாததொன்றாகும்.

**உத்தியோக ஆற்றலின் பொறுப்பேற்காத தன்மை (RS இன் உறுப்புரை 27)**
உத்தியோக ஆற்றலின் குறிப்பீட்டை பொறுப்பேற்காது, உரோம நியதிச்சட்டமானது எல்லா நபர்களுக்கும் சமத்துவமாக செயற்படும். தேசிய மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் தண்டனையிலிருந்து விலக்கீடானது ICC இன் நியாயாதிக்கத்தின் கீழ் செயலிழக்கின்றது.

**7 - தண்டனைத் தீர்ப்பு**
ICC யானது மரண தண்டனையை அங்கீகரிக்காது, குற்றத்தின் பாரதூரத்திற்கேற்ப தண்டனையை கூடிய பட்சம் 30 வருட சிறைத்தண்டனை அல்லது ஆயுள் தண்டனையை விதிக்கின்றது. சிறைத்தண்டனைக்கு அப்பால், தண்டப்பணம் செலுத்துமாறும் அல்லது வருவாய், காணி மற்றும் சொத்துக்களை பறிமுதல் செய்யுமாறும் ICC ஆனது கட்டளையிடலாம்.

**8 - நீதிமன்றத்தின் அமைப்பு**

ICC இனுள் 4 அங்கங்கள் உள்ளன:

- **தலைமை ஸ்தானம்** (Presidency) - தலைவர் திரு. பிலிப்பே கர்ஷ் (கனடா) மற்றும் இரு உப தலைவர்களை உள்ளடக்கியது.
- **ஆலோசனை மண்டபம்** (Chambers) - இது முன்-விசாரணை ஆலோசணை மண்டபம், விசாரணை மண்டபம் மற்றும் மேன்முறையீட்டு ஆலோசனை மண்டபங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மேலும் அரச கட்சிகளின் சபையால் நியமிக்கப்பட்ட 18 நீதிபதிகளை கொண்டுள்ளது.
- **வழக்குத்தொடருநரின் காரியாலயம்** (Office of the Prosecutor)- அரச கட்சிகளின் சபையால் நியமிக்கப்பட்ட வழக்குத்தொடருநர் திரு லுயி மொரேனோ ஒகம்போ (ஆர்ஜன்டினா), மேலும் அரச கட்சிகளின் சபையால் நியமிக்கப்பட்ட இரண்டு பிரதி வழக்குத்தொடருநர்கள், திரு சர்ஜ் பிரமட்ஸ் (பெல்ஜியம்) மற்றும் திருமதி. பட்டு பென்ஸூவோடா (கம்பியா)
- **பதிவாளர் காரியாலயம்** (Registry), அரச கட்சிகளின் சபையால் நியமிக்கப்பட்ட பதிவாளர் திரு புருனோ கதாலா (பிரான்ஸ்) வின் தலைமைத்துவின் கீழ் இயங்குகின்றது

**9 – பாதி ப்புக்குட்பட்டோரின் உரிமைகள்**

சர்வதேச குற்றவியல் சட்டத்தை பாதிப்புக்குட்பட்டோர் அணுகுவது ஒரு புது விடயமாகும். நீண்டகாலமாக பாதிப்புக்குட்பட்டோரினது நலன்களை சர்வதேச சட்டம் கவனத்திற்கொள்ளவில்லை. 1945 இல் நிவ்ரம்பர்க் மற்றும் 1993 இலும் 1994 இலும் சர்வதேச குற்றவியல் நியாயசபைகள் (முன்னாள் யுகொஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாயசபை (ICTY) மற்றும் ருவாண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாயசபை (ICTR) ஸ்தாபிக்கப்பட்ட முன்னரும் பாதிப்புக்குட்பட்டோர் ஒரு சாட்சியாகவே கருதப்பட்டனர். ICC இன் நியதிச்சட்டமானது சர்வதேச சட்டத்தின் பாதிப்புக்குட்பட்டோரினது நியதிச்சட்டத்தைப் புனிதப்படுத்துகின்றது. இது பாதிப்புக்குட்பட்டடோரினது பாதுகாப்பு, பங்களிப்பு, சட்ட பிரதிநிதித்துவம் மற்றும் ஈடுசெய்தல் ஆகிய புதிய ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது

**"பாதிப்புக்குட்பட்டோர்" என்ற பதத்தின் விரிவான விளக்கம்**

ICC நியதிச்சட்டத்தின் வரைவிலக்கணம் நேரடியாக பாதிக்கப்பட்டடோரை உள்ளடக்குவதோடு மறைமுகமாக பாதிக்கப்பட்டோரையும் உள்ளடக்குகின்றது. மேலும், உடலியல் பாதிப்பிற்கு அடுத்தபடியாக மனரீதியான பாதிப்பு கருதப்படுகின்றது. இயற்கையான நபர்கள் மட்டுமே பாதிப்புக்குட்பட்டோராக ICC இன் முன் கருதப்படுகின்றது.

**பாதிப்புக்குட்பட்டோர் மற்றும் அவர்களது குடும்பங்களை பாதுகாத்தல்**

ICC இனது இன்னொரு முன்னேற்றமான அங்கமானது பாதிப்புக்குட்பட்டோர்-சாட்சிகளை விசாரணையின்போதும், நடவடிக்கைகளின் போதும் பாதுகாப்பை உறுதிசெய்வதாகும். நீதிமன்றத்திலிருந்து உடலியல் பாதுகாப்பு பெறுவதற்கு மட்டுமின்றி, மனரீதியான பாதுகாப்பை பெறுவதற்கும் பாதிப்பிற்குட்பட்டோருக்கும், சாட்சிகளுக்கும் உரிமை உண்டு.

**பயனுறுதிவாய்ந்த பங்களிப்பு**

விசாரணைகளுக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்கு அப்பால், பாதிப்புக்குட்பட்டோர், அவர்களது உரிமை பற்றி நன்கு விளக்கப்பட்டு தகுந்தளவில் பிரதிநிதித்துவப்படுவோர் ஆயின் ICC இன் நடவடிக்கைளில் பங்குகொள்வதற்கு முடியும். நடவடிக்கைகளின் பிரதிகூலங்கள், முறைகள் மற்றும் பங்களிப்பின் வரம்புகள் என்பனவை அறியத்தறப்பட்டதன் பின் பாதிப்புக்குட்பட்டோருக்கு தங்கள் விருப்பின்படி வழக்குறைஞரை தெரிவுசெய்து கொள்ளலாம்.

**புனருத்தாரணம்**

காலத்திற்கேற்ப உருவாக்கப்படும் நியாயசபைகளை போலன்றி, ICC ஆனது பாதிப்புக்குட்பட்டோருக்காக உண்மையான புனருத்தாரண செயற்பாடொன்றை ஸ்தாபிக்கின்றது. நீதிமன்றமானது ஒரு குறிப்பிட்ட கோரிக்கையை எதிர்பார்க்காது, பாதிப்புக்குட்பட்டோருக்கு அல்லது அவர்களுக்கு பதிலாக நன்மையை பெறும் நபர்களுக்கு (மீளளிப்பு, நஷ்டஈடு அல்லது புனர்வாழ்வு), பாதிப்பை ஏற்படுத்தியவர்களால் திருத்தப்பட வேண்டிய பாதிப்பின் பெறுமதியையும் அதன் விசாலத்தையும் கணக்கிலிடுகின்றது. குற்றவாளியால் நேரடியாக நஷ்டஈட்டுத் தொகையை செலுத்த முடியாத தருணத்தில், ICC இனது துணை நிறுவனமாகிய பாதிக்கப்பட்டவர்களுக்கான அற நிதியம் உதவி புரியும். குற்றவாளிகளுக்கு எதிராக கட்டணமிடப்பட்ட தண்டப்பணங்கள், பறிமுதல்கள் மற்றும் அரசுகள், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களால் தன்னிச்சையாக வழங்கப்பட்ட தொகைகளை இந்த அற நிதியம் கொண்டுள்ளது.

## அமர்வு I
## இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டம்

தலைமை: கிறிஸ்டின் மார்த்தினோ, சட்டத்தரணி (பிரான்ஸ்), FIDH

பகுதி I

- சர்வதேச மனித உரிமைகள் சார்ந்த கருவிகள்: மனித உரிமைகளின் உலக பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (ICCPR), பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம்
- இலங்கை அரசியலமைப்பின் கீழுள்ள அடிப்படை உரிமைகள்

வளப் பகிர்வாளர்கள்: சுதர்ஷன குனவர்தன, ஜனநாயக உரிமைகனை பாதுகாப்பிற்கான இயக்கம் (MDDR)

மதமாற்றங்கள் (மாற்றுதலுக்கு எதிரான மசோதா) தொடர்பான சட்டத்தினை அமுலாக்குவது தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றிய கலந்துரையாடல் மூலம் இலங்கையின் அரசியலமைப்பின் கீழுள்ள சர்வதேச மனித உரிமைகள் கருவிகள் மற்றும் அடிப்படை உரிமைகள் சம்பந்தமாக திரு. சுதர்ஷன குனவர்தன ஒரு உணர்வுபூர்வமான உரை ஒன்றை செய்தார். இவ்வமர்வு அரசியலமைப்பு கோட்பாடுகள், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்பினூடாக இலங்கையில் அதன் பிரயோகம், கோட்பாடளவிலும், நடைமுறையளவிலும் தேசிய சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள், காணப்படுகின்ற தீர்வுகளின் பரிமானங்கள் மற்றும் சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் எவ்வாறு இலங்கையர்கள் மீது தேசிய ரீதியாக பிரயோகிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது என்றும் இலங்கை சட்ட முறையின் இரட்டிப்பு தன்மை போன்ற விடயங்கள் மீதும் சிறிது நேரம் கவனம் செலுத்தப்பட்டது.

இதிலிருந்து கலந்துரையாடல் காணாமல் போதல்கள் மீது கவனம் செலுத்தப்பட்டது (இவ்விடயம் தற்போது பெரும் சர்சைக்குரிய விடயமாகவும், பங்குபற்றியவர்களுக்கும் இதைப்பற்றி அறிந்தும் இருந்தனர்). நீதியாட்சியை பின்தொடரும் ஒரு ஜனநாயக நாடு என்பதன் அர்த்தம் என்ன? கடத்தல் தொடர்பாக ஒரு சட்ட தீர்வு இருத்தல் அவசியம். ஆனால் கடத்தல்கள் அரச தரப்பினரால் செய்யப்பட்டதனால் பொதுவான குற்றவியல் விசாரணைகள் நடாத்தப்படுவதில்லை. அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் கீழ் உயிருக்கான உரிமை குறிப்பிடப்படாததினால், இதனூடாக பெறக்கூடிய தீர்வுகள் பெறமுடியாதது மட்டுமின்றி சட்டரீதியற்ற கைது/ தடுப்புக்காவல் அல்லது துன்புறுத்தல் சம்பந்தமாக வாதாடுவதற்கு, அரசியலமைப்பு நிர்ப்பந்தத்தின் படி உரிமைகள் மீறப்படும் நபரிடமிருந்து மனுக்களை பெறுதல் ஒரு தடையாகவே உள்ளது[1]. சர்வதேச சட்ட தீர்வுகள் விடயத்தில், இலங்கை சர்வதேச சமவாயங்களின் விருப்பத்தெரிவு வரைவேடுகளின் கட்சியாக இல்லாத காரணத்தால் தனிநபர்களுக்கு நேரடி அணுகலை அனுபவிக்க முடியாது. காணப்படுகின்ற ஒரே தீர்வானது மிக பழமை வாய்ந்ததனால் ஞாபகத்திலிருந்து விடுபட்டிருந்தது: இது மிக பழைமை வாய்ந்த, அதாவது உயிருடனோ அல்லது பிணமாகவே ஆஜராக்கச்சொல்லும் (habeaus corpus) ஆணையாகும். இருப்பினும் இவ்வழக்குகள் முடிவுறுவதற்கு பல வருடங்கள் எடுத்தன.

[1] முன்தீர்ப்புச் சட்டத்தின் மூலம் இவ்விடயம் திருத்தப்பட்டுள்ளது: உயர்நீதி மன்றம் ஒரளவிற்கு உயிருக்கான உரிமையை அங்கீகரித்து, அதிக பிரச்சனையான சூழ்நிலைகளில், உரிமைகளை மீறப்பட்ட நபர் இல்லாதவிடத்து குடும்பத்தினருக்கு சட்டப்பூர்வமான அந்தஸ்த்து *(locus standi)* வழங்கியுள்ளது.

மேலும், இக்கலந்துரையாடலானது சட்டத்தின் வரையறைகள்[2] மற்றும் சூழ்நிலை மாற்றுவதன் நோக்கோடு, தேசியளவிலும் சர்வதேச அளவிலும் அரசியல்வாதிகளுடன் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் குழுக்களுடன் இவ்விடயங்கள் சம்பந்தமாக அழுத்தம் செலுத்தக்கூடிய குழுக்களை நிறுவது போன்று உரிமைகளை உறுதிசெய்வதற்காக காணப்படும் வேறுவழிகள் சம்பந்தமானதாக அமைந்தது. தற்போது நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளவையாக கருதப்படுகின்ற செயற்பாடுகளுள் ஒன்றான, காலத்திற்கு காலம் பலதரப்பட்ட கண்காணிப்பு குழுக்களுக்கு கூடுதலான அளவில் அறிக்கைகளை சமர்ப்பிப்பதன் மூலம் 1994 தொடக்கம் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளை கூட்டியது மற்றும் மனித உரிமைகள் சபையில் தனிநபர்கள் முறைப்பாடுகள் செய்வதற்கான அணுகலை வழங்குதல் போன்ற பல முன்னேற்றங்கள் இச்செயற்பாட்டின் மூலமே சாதிக்கப்பட்டது எனவும் சுதர்ஷன குனவர்தன எடுத்துக்காட்டினார். இலங்கையர்களால் முகம்கொடுக்கப்படும் தொடர்ச்சியான பிரச்சனை, தங்களது கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக மனித உரிமைகள் கருதப்படாது, சர்வதேச ஒப்பந்தங்களின் மூலம் திணிக்கப்படும் ஒன்றாகவே கருதப்படுகின்றது என்றும், ஆதலால் இதன் ஏற்பும் பெறுமதியும் மிக குறைவாகவே காணப்படுகின்றது என்றும் கூறினார். மனித உரிமைகள் பற்றின எல்லா தீர்மானங்களும் அடிப்படை கோட்பாடுகளின் என்ற பெயரில் அல்லாது அரசியலின் பெயரிலே எடுக்கப்படுகின்றதனால், இவர்கள் எதிர் தரப்பில் இருக்கையில் மற்றையவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் தரத்தை இவர்கள் அரசாங்கமாக மாறுகையில் அத்தரத்தின் பெயரில் செயற்பட மறுக்கின்றனர்.

பகுதி II

- இலங்கையில் துன்புறுத்திலூடாக பாதிக்கப்படடவர்களுக்கான தீர்வுகள்: துன்புறுத்தலிற்கு எதிரான ஐ.நா சமவாயமும் இலங்கையில் அதன் செயற்பாடும்

  வளபகிர்வாளர்: லோனா மக்கிரகோ, சர்வதேச சட்ட நிபுணர்களின் சங்கம்

  செல்வி லோனா மக்கிரகோ, துன்புறுத்தலிலிருந்து பிழைத்துள்ளோருடன் செயற்பட்டு அவர்களுக்கு தேவையான சட்டத் உத்திகளை வழங்கும், ரிடிரஸ் (Redress) எனும் நிறுவனத்தில் கடமையாற்றுகையில் கிடைத்த அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

  இவ்வமர்வு துன்புறுத்தலிற்கு எதிரான சமவாயத்திற்கான (CAT) சபைக்கான சமர்ப்பிப்புகளின் மேல் கவனம் செலுத்தியது:

  துன்புறுத்தலிற்கு எதிரான சபை என்பது என்ன?

  - துன்புறுத்தலிற்கு எதிரான சமவாயத்தின் உறுப்புரை 17, துன்புறுத்தலிற்கு எதிரான சபையினை ஸ்தாபிக்கின்றது
  - இச்சபை அரசு கட்சிகளால் நியமிக்கப்பட்ட 10 நிபுணர்களை கொண்டுள்ளது
  - அரச கட்சிகளால், CAT இன் நடைமுறைப்படுத்தலை கண்காணிப்பதற்காக சபை ஸ்தாபிக்கப்பட்டது. இது CAT இனது அதிகாரமுள்ள கட்டாய உறுப்பாகும்.

CAT ஐ எவ்வாறு பயன்படுத்த முடியும்?

5 வழிகள் உள்ளன, அவை:

- <u>அரச கட்சிகளின் அறிக்கைகள்</u>

[2] அரசியலமைப்பினூடாக வழங்கப்பட்டுள்ள பெரியளவிலான உரிமைகளுக்கான உத்தரவாதத்தை, நாடு ICCPR இன் கட்சியென்றும் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபக உறுப்பினர் என்பவற்றினையும் கணக்கெடுக்காது, அரசாங்கமானது காணாமல் போதல்களை மன்னிக்கும், பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசரகால சட்டத்தினை உத்தியோகப் பூர்வமாக அறிவித்தது. இவ்வாறான முன்னேற்றங்களை காணப்பட்ட ஒரே, வரையறுக்கப்பட்ட இலங்கையர்களுக்கான தீர்வு முன்னர் குறிப்பிட்டிருந்தது: இது மிக பழைமை வாய்ந்த, நபரை உயிருடனோ அல்லது பிணமாகவே ஆஜராக்குதல் ஆணையாகும்.

CAT இனை அமுல்படுத்தல் சம்பந்தமான அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பிப்பதற்கு அரச கட்சிகள் கடமைப்பட்டுள்ளன (4 - 5 வருடங்களுக்கு ஒரு முறை)

- தனிநபர் தொடர்பாடல்

  பொதுவாக, சமவாயத்தின் கீழ் ஒரு தனிநபரிடமிருந்து அவரது உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று தனிநபர் தெரிவிப்புகளை CAT பெற்றுக்கொள்ள முடியும். எவ்வாறாயினும் குறிப்பிட்ட அரசானது சமவாயத்தின் உறுப்புரை 22 இன் கீழ் தனிநபர் தொடர்பாடல்களை பெற்றுக்கொள்ளும் சபையினது அதிகாரத்தை அங்கீகரிப்பதற்கு தேவையான வெளிப்படுத்தலை செய்திருந்தால் மட்டுமே இச்செயற்பாட்டை பாவனைக்குட்படுத்த முடியும்.

  இலங்கை, உறுப்புரை 22 சம்பந்தமாக வெளிப்படுத்தல் செய்திராத பட்சத்தில், தற்போது தனிநபர் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது (எவ்வாறாயினும் இவ்வாறான வெளிப்படுத்தலை செய்யும் படி சிவில் சமூகம் அழுத்தம் செலுத்த விரும்பும்). எனினும் ICCPR இன் நடைமுறைப்படுத்தலை கண்காணிக்கும் பொறுப்பினை கொண்ட மனித உரிமைகள் சபைக்கு, விருப்பத்தெரிவு வரைவேட்டினை இலங்கை சேர்த்துக்கொண்டதனாலும், சபையின் திறமையினை அங்கீகரித்ததன் காரணத்தினாலும் தனிநபர் முறைப்பாடுகளை ஏற்றும், ஏற்றுக்கொண்டும் வருகின்றன.

- அரசுகளுக்கிடையிலான முறைப்பாடுகள்

  இச்செயற்பாடு இற்றைவரை பாவனைக்குட்படுத்தப்படவில்லை. உறுப்புரை 21 இன் கீழ் இலங்கை வெளிப்பாடு சமர்ப்பித்திருக்கவில்லை.

- CAT இனால் செய்யப்பட்ட விசாரணைகள்

  சமவாயத்தின் முறையான மீறலொன்று நடைப்பெற்று இருக்கின்றது என நம்பினால் CAT தனிப்பட்ட முறையில் விசாரணைகளை நடாத்துவதற்கான உரிமையை கொண்டுள்ளது.

- பொதுக் கருத்து

  CAT பொதுக் கருத்துக்களை வெளியிடலாம். எவ்வாறாயினும் மனித உரிமைகள் சபையை போன்றல்லாது, இது ஒரு குறிப்பினை மட்டுமே வெளியிட்டுள்ளது.

## REDRESS நிறுவனத்தினால் CAT இற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிழல் அறிக்கை[3]

அரச சார்பற்ற நிறுவனங்களினால் சர்வதேச மனித உரிமைகள் சூழ்நிலை சம்பந்தமாக "நிழல்" அறிக்கைகளினை சமர்ப்பிப்பதற்கு CAT அனுமதி வழங்கும்.

அறிக்கையை தயாரித்தல்

சமவாயத்தின் கீழ் அனுபவிக்கப்படும் உரிமைகளின் ஒரு பட்டியலை CAT முதலில் வரைகின்றது (சம்பந்தப்பட்ட அறிக்கையிலிருந்து மற்றும் சபைக்கு கிடைக்கப்பெற்ற வேறு தகவல்களின் அடிப்படையிலும் இது எடுக்கப்படும்). இது அரசிற்கு அனுப்பப்பட்ட பின், வழமையாக (இத்தருணத்தை போன்று) அரசாங்கத்தினால் இதற்கான பதில்கள் எழுத்து வடிவில் அனுப்பப்படும்:

இலங்கைக்கான விடயங்களில் CAT பின்வருவனவற்றை எடுத்துக்காட்டியது:

- தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுதந்திரம் மற்றும் பாராபட்சமற்ற தன்மை
- பால்நிலை தொடர்பான விடயங்கள்

3 பார்க்க, ரிடிரெஸ் அறிக்கை "துன்புறுத்தலிற்கு எதிரான சபைக்கான இலங்கையின் இரண்டாம் தவணை அறிக்கை சம்பந்தமான குறிப்புகள்", ஒக்டோபர் 2005, http://www.redress.org/publications/SubmissionsSL31Oct2005.pdf இல் கிடைக்கப்பெறும்.

- தண்டனையிலிருந்து விலக்கீடு
- பாதிக்ப்பட்டோரினது உரிமைகள்
- சாட்சிகளுக்கான பாதுகாப்பு
- சிறுவர்களை படையில் சேர்த்தல்
- உரோம நியதிச்சட்டத்தை வலுவாக்குவதை இலங்கை என்னியுள்ளதா என்பது

நிழல் அறிக்கையின் மையமாக CAT உடன் தேசிய சட்டம் _மற்றும்_ வழமைகள் இசைகின்றனவா என்பதாகும். குறிப்பாக இலங்கை போன்ற இரட்டை ஆட்சிகள் நடைபெறுகின்ற நாடுகளில், அரசானது ஒரு சமவாயத்தை வலுவாக்கிய (இலங்கையை பொறுத்தவரையில், சமவாயத்தை இணைத்ததன் பின்னர்) போதும், உள்ளூர் நீதிமன்றங்கள் சமவாயத்தினை பிரயோகிக்க முயலும் பொழுது பிரச்சனைகள் எழுகின்றன. அரசுகள், தெளிவான நடைமுறைப்படுத்தல் சட்டவாக்கங்களை தழுவாது, நடைமுறையில் காணப்படும் பல சட்டங்கள் ஒரு குறிப்பிட்ட உரிமையை மற்றும்/ அல்லது கடப்பாட்டினை வழங்குகின்றது என கோருகின்றன. இவை பெறுவாரியாக இடைவெளிகளை உருவாக்குகின்றன.

விடயப் பட்டியலின் அடிப்படையில், ரிடிரெஸ் பின்வருவனவற்றில் கவனம் செலுத்தியது:

- முறைப்பாட்டு ஒழுங்குமுறை, விசாரணை, வழக்குத் தொடரல் மற்றும் தண்டனை இத்துடன்
- இலங்கையில் துன்புறுத்தலுக்கான புனருத்தாரணம் (reparations)

நிழல் அறிக்கையினை தயாரிக்கையில், ரிடிரெஸால் விடுக்கப்பட்ட கேள்விகள்:

- சட்டங்கள் CAT உடன் இசைகின்றனவா?
- CAT இன் கீழுள்ள உரிமைகளுக்கும் கடப்பாடுகளுக்கும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளனவா?
- இணக்கமற்ற சட்டங்கள் ஏதும் உள்ளனவா? உதாரணமாக: துன்புறுத்தலை தடைசெய்வதிலும் நேர்மையான வழக்கிற்கான உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் PTA இனை CAT இணக்கமற்றதாக கருதியது.
- நடைமுறையில், சமவாயத்தின் உரிமைகளும் கடப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா?

இதன் நிலைப்பாட்டினை ஆதரிக்கும் முகமாக, ரிடிரெஸ் CAT ஐ மட்டுமின்றி, சமவாயத்தின் கீழ் உரிமைகளையும், கடப்பாடுகளையும் விளக்குகின்றது. உதாரணமாக பாராதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கடுமையான மீறல்கள் சம்பந்தமாக தீர்வுக்கு மற்றும் புனருத்தாரணத்திற்கான உரிமை தொடர்பான அடிப்படை கோட்பாடுகள் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச நியாயசபைகளின் சட்டவியல் தன்மை; மற்றைய சர்வதேச பொருத்தனைகள்; வழக்கமான சர்வதேச சட்டங்கள் ஆகியன போன்ற மற்றைய சர்வதேச சட்ட மூலங்களையும் குறிப்பிடுகின்றது.

<u>அடுத்த நடவடிக்கைகள்</u>

அடுத்த இலங்கைக்கான அறிக்கை (மூன்றாம் நான்காம் இணை அறிக்கை) 2007, பெப்ரவரி 1 இல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மிக அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில், அறிக்கை தயாரிக்கும் செயற்பாட்டில் இலங்கை சிவில் சமூகத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என சபை பரிந்துரைத்தது. இந்த விடயம் சம்பந்தமான அழுத்தம் கொடுக்கவும் பரந்த பங்களிப்பினை பெற்றுக்கொள்வதிலும் குழுக்கள் தயாராகுவதை பற்றி கருதுவதற்கான முயற்சிகளை எடுப்பது பொருத்தமான விடயமாகும்.

*CAT ஆனது ஏன் பயனுள்ளதாக இருக்கக்கூடும்?*

சபையானது அதன் பரிந்துரைகளின் (இறுதி குறிப்புகள்) நடைமுறைப்படுத்தலை அரசுகளுக்கு வலுக்கட்டாயமாக திணிக்க முடியாது போதிலும், சிவில் சமூக குழுக்களின் செயற்பாடுகளுக்கு CAT இன் கீழுள்ள 5 செயன்முறைகள் மிகுந்த பயனை அளிக்க உதவும். பிராந்திய செயன்முறைகள் இல்லாதவிடத்து இலங்கை போன்ற நாடுகளுக்கு இது மிகுந்த பயனையளிக்கும் ஒன்றாக செயற்படும் (உதாரணமாக: மனித உரிமைகள் ஆணைக்குழு அல்லது நீதமன்றம்).

வழக்காடலின் போது

சமவாயத்தின் அதிகாரமுள்ள கட்டாய உறுப்பாகிய CAT இன் எந்தவொரு தீர்மானமும் வழக்காடலின் போது பாவனைக்குட்படுத்தப்படுவது அவசியம், குறிப்பாக உள்ளூர் மட்டத்தில். உதாரணமாக: பௌசாரி (Bouzari) மற்றும் உலக நியாயாதிக்கம்.

எடுத்துரைத்தலுக்கான கருவி

அரச கட்சி அறிக்கைகள் மற்றும் இறுதி குறிப்புகள் மனித உரிமைகளின் நிலையினை எடுத்துக்காட்டுவதில் முக்கியத்துவம் வகிக்கின்றன. குறிப்பாக மனித உரிமைகள் விடயத்தினை நிகழ்ச்சி நிரலில் தொடர்ச்சியாக வைப்பதற்கு கடினமாக இருக்கும் இலங்கை போன்ற நாடுகளின் சூழ்நிலையை கருத்திற்கொள்வதாகும்.

நிதியுதவி

குறிப்பிட்ட செயற்பாடுகளிற்காக நிதியுதவி அளிப்போரிற்காக குறிப்பிட்ட இறுதி குறிப்புகளின் பரிந்துரைகளை அடிப்படையாக பயன்படுத்தலாம்.

ICC உத்திகளுடன் பயன்படுத்துகையில்

பல நாடுகளை போன்று இலங்கை அதன் உள்நாட்டுச் சட்டத்தில் CAT இனை முழுமையாக நடைமுறைப்படுத்த தவறியுள்ளது. நிகழ்ச்சி நிரலில் CAT இன் தெளிவான நடைமுறைப்படுத்தலை உள்ளடக்குவது ஒரு கடினமான காரியமாகும். எவ்வாறயினும், உள்நாட்டுச் சட்டத்தினுள் உரோம நியதிச்சட்டத்தின் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக அழுத்தம் செலுத்துகையில் மற்றைய சர்வதேச பொருத்தனைகளின் நடைமுறைப்படுத்தலையும் கருத்திற் கொள்வதை IBA மற்றும் ICC சம்பந்தமாக செயற்படுகின்ற வேறு நிறுவனங்களின் அணுகுமுறையாக அமைந்துள்ளது.

**பகுதி III**

- **சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் முக்கிய செயன்முறைகளும் தராதரங்களும் (ஜெனீவா சமவாயங்கள் 1949, மேலதிக வரைவேடுகள் 1977); இலங்கையில் இவற்றின் வலுவாக்கல் மற்றும் நடைமுறைப்படுத்தல்**

வளப்பகிர்வாளர்: ரெனோட் கலன்ட் (பெல்ஜியம்), FIDH

**1 – சர்வதேச மனிதாபிமான சட்டம் என்பது என்ன?**

**அ. தோற்றங்கள்**

“சக்திவாய்ந்தவர்கள் பலவீனமானவர்களை அடக்குவதலிருந்து தவிர்ப்பதற்காக இச்சட்டங்களை நான் ஸ்தாபித்தேன்” (ஹமுராபி, பபிலோனிய அரசன்)

மகாபாரதம், பைபில் மற்றும் குரான் போன்றவைகளில் எதிராகச் செயற்படுபவர்களை மதிப்பதை எடுத்துரைக்கும் விதிகளை உள்ளடக்குகின்றன.

1863: லிப கோவை (அமெரிக்க சிவில் யுத்தம்)
1863: சர்வதேச செஞ்சிலுவை சங்கம் (ஜெனிவா)
1864: முதல் ஜெனிவா சமவாயம்

**ஆ. வரைவிலக்கணம்**

சர்வதேச மனிதாபிமான சட்டம் (IHL) (யுத்தத்தின் சட்டம் மற்றும் ஆயுத முரண்பாட்டின் சட்டம் எனவும் கூறப்படுகின்ற) ஆயுத முரண்பாட்டின் போது, யுத்தத்தில் ஈடுபடுவதை நிறுத்த அல்லது யுத்தத்தில் ஈடுபடாத மக்களை பாதுகாப்பதற்கான மற்றும் யுத்தமுறையினை அடக்கும் முகமான முறைகளை பயன்படுத்தி, யுத்தத்தினால் ஏற்படும் அவலத்தினை குறைப்பதற்கான விதிகளை உள்ளடக்குகின்றது.

**இ. IHL இன் மூலங்கள்**

IHL இன் மூலங்கள் சமவாயங்கள், சர்வதேச நடைமுறைச் சட்டங்களிலிலும் மற்றும் நீதிமன்றங்கள், தேசிய, சர்வதேச மட்டங்களிலுள்ள நியாயச்சபைகளிலிருந்து வரும் முன்தீர்ப்புச் சட்டங்களிலிலும் காணப்படும்.

- பிரதான சமவாய மூலங்கள்

1949: நான்கு ஜெனிவா சமவாயங்கள் (192 அரச கட்சிகள்)
1954: ஹேக் சமவாயம் - கலாச்சார சொத்து
1972: கிருமி சார்ந்த மற்றும் விஷம் சார்ந்த ஆயுதங்கள்
1977: 1949 இன் நான்கு ஜெனிவா சமவாயத்திற்கான இரு மேலதிக வரைவேடுகள்
1980: சில பாரம்பரிய ஆயுதங்களின் பாவனை சம்பந்தமான தடுப்பு அல்லது கட்டுப்பாடுகள்
1993: இராசாயன ஆயுதங்களின் தடுப்பு
1997: ஒடாவா: கண்ணிவெடிகளின் தடைக்கான சமவாயம்
1998: சர்வதேச குற்றவியல் நீதமன்றத்தின் உரோத நியதிச்சட்டம்
2000: ஆயுத முரண்பாட்டில் சிறுவர்களின் ஈடுபாடு
ஒரு சமவாயம் ஒன்றின் பிணைப்பை (ஒப்பம் மற்றும் வலுவாக்கல்/ இசைவு) ஏற்றுக்கொண்டால் மட்டுமே ஒரு அரசானது அச்சமவாயத்தின் பிரயோகத்தை ஏற்றுக்கொள்ளலாம் எனும் சர்வதேச சட்டத்தின் தொடர்புபடுத்தல் அடிப்படையை நாங்கள் மனதில் வைத்திருத்தல் அவசியம்.

- சர்வதேச நடைமுறைச் சட்டம்

நடைமுறை வழக்கங்கள் சட்டமாக கருதலாம். இதன் மூலங்கள் பரந்த மற்றும் அரச வழக்கங்களை பிரதிநிதிப்படுத்துவதாகவும் அமைகின்றன. அவையாவன இராணுவச் செயற்பாடுகள் தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிக்கைகள், மற்றைய உத்தியோகபூர்வ ஆவணங்கள், இராணுவ கையேடுகள், தேசிய சட்டவாக்கம் மற்றும் முன்தீர்ப்புச் சட்டம் ஆகும்.

- நீதிமன்றங்கள் மற்றும் நியாயசபைகளின் தீர்மானங்கள்

IHL இன் மூலங்களாக தேசிய நீதமன்றங்களின் மற்றும் சர்வதேச நியாயசபைகளின் (ICTY, ICTR, ICC) தீர்மானங்களும் கருதப்படுகின்றன.

**<u>2 – IHL, சர்வதேச உறவுகள் மற்றும் சர்வதேச பொது சட்டம்</u>**

***அ. ஜஸ் அட் பெலும் - ஜஸ் இன் பெலோ***
*ஜஸ் அட் பெலும்* முரண்பாட்டின் சட்டத்தன்மையினை பூர்த்தி செய்கின்றது. யுத்தத்தில் ஈடுபட்டிருக்கையில் கடைபிடிக்கக்கூடிய ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகள் சம்பந்தமான ஒப்பந்தங்களை *ஜஸ் இன் பெலோ* குறிப்பிடுகின்றது.

மனிதாபிமான கவனத்தின் முரண்பாட்டு விடயங்களை கட்டுப்படுத்துவதில் மட்டுமே IHL கவனம் செலுத்துகின்றது. எந்தவொரு கட்சியும் போராட்டத்திற்கான விடயத்தினை ஏற்றுக்கொள்கின்றதா இல்லையா என்பதை பொருட்படுத்தாத, சட்டமானதா சட்டமற்றதா என்பதனையும் பொருட்படுத்தாத, யுத்தத்தை செயற்படுத்தும் கட்சியினா் எவராயிருந்தாலும் இது பொருந்தும். யுத்த நடத்தை சம்பந்தமான விதி மீறல்கள் மற்றும் IHL தொடா்பான மீறல்கள் ஆகியவற்றால் எழக்கூடிய பழிவாங்கல்கள் சம்பந்தமாக கேள்விகள் ஏதும் கேட்கப்படமாட்டாது.

ஜஸ் அட் பெலும் ஆனது ஜஸ் இன் பெலோ இலிருந்து சுதந்திரமாகவே காணப்படவேண்டும்.

**ஆ. IHL மற்றும் மனித உரிமைகள்**

IHL மற்றும் மனித உரிமைகள், ஒன்றையொன்று ஈடுசெய்வதாக அமைகின்றது. இரண்டும், தனிநபா்களின் உயிா்கள், சுகாதாரம் மற்றும் கீா்த்தியை பாதுகாப்பதற்கு அயராது உழைக்கின்றன. மனிதாபிமான சட்டம் முரண்பாடு நடைபெறும் தருணங்களில் மாத்திரமே பிரயோகப்படலாம்.

எச்சூழ்நிலையிலும் மதிக்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகள் சிலவற்றை தவிர, சில உரிமைகளை மனித உரிமை ஒப்பந்தங்கள் அரசாங்கங்களை பொது அவசரங்களின்போது தாழ்வுபடுத்துவதற்கு அனுமதிக்கின்றன.

<u>3 – எச்சந்தா்ப்பங்களில் IHL பிரயோகப்படுத்தப்படலாம்? எப்பொழுது, எப்படி, யாருக்கு இது பொருந்தும்?</u>

**அ. எதற்கு?**

IHL முரண்பாடு நடைபெறும் தருணங்களில் மாத்திரமே பிரயோகப்படலாம்.

- சா்வதேச ஆயுத முரண்பாடு
  - இரு அல்லது அதற்கு மேலான எண்ணிக்கையான அரசுகள் தொடா்புற்றுள்ள போதும்.
  - ஒரு உள்நாட்டு முரண்பாட்டில் ஒரு வெளிநாட்டு அரசின் தலையீடு இருப்பின் (போராளிகள் அல்லது வேறு உதவி)
  - ஐ.நா இராணுவ தலையீடு
  - பிரிவினைக்கான முரண்பாடு (கடும் நிலைமைகள்) மற்றும்
  - தேசிய விடுதலை யுத்தம் (குடியேற்றம், இனவாத ஆட்சி அல்லது வெளிநாட்டு ஆக்கிரமிப்பிற்கு எதிராக)

  போன்ற தருணங்கள் சா்வதேச ஆயுத முரண்பாட்டை பற்றி பேசமுடியும்.

- உள்நாட்டு ஆயுத முரண்பாடு

  வரைவிலக்கணங்களில் குறைப்பாடுகள் நிலவுகின்றன. ஜெனிவா சமவாயத்திற்கான இரண்டாம் மேலதிக வரைவேடுகள் (உறுப்புரை 1 (1)), உள்நாட்டு ஆயுத முரண்பாடு சம்பந்தமாக ஒரு குறுகிய கண்டிப்பான வரைவிலக்கணத்தை வழங்குகின்றது. எவ்வாறாயினும் 1949 இன் ஜெனிவா சமவாயத்தின் பொது உறுப்புரை 3 ஒரு கண்டிப்பான வரைவிலக்கணத்தை தராததினால் உள்நாட்டு ஆயுத முரண்பாடு சம்பந்தமான புரிந்துணா்வு இரண்டாம் மேலதிக வரைவேட்டின் படி அல்லாது பரந்து காணப்படுகின்றது.

  உள்நாட்டு வன்முறை சந்தா்ப்பங்களிலும் உள்நாட்டு கலவரங்களிலும் IHL இனை பிரயோகிக்க முடியாது. இவ்வாறான தருணங்களில் மனித உரிமைகள் சட்டம் பிரயோகத்திட்குட்படும்.

- யாருக்கு? யாா் IHL ஆல் கட்டுப்படுத்தப்படுகின்றனா்?
  - அரசுகள்
  - சா்வதேச நிறுவனங்கள் (நடைமுறைச் சட்டத்தின் படி அல்லது குறிப்பிட்ட விதிகளின் படி)
  - தேசிய விடுதலை இயக்கங்கள்

- ஓர் உள்நாட்டு முரண்பாட்டிற்கான கட்சிகள்
- தனிநபர்கள்: ஏற்றுக்கொள்ளாதவிடத்து அத்தனிநபர்கள் தண்டனைச் சட்டத்தின் கீழ் பொறுப்புக்குட்படுத்தப்படுவார்கள்

- எப்பொழுது இது பிரயோகத்திட்குட்படுத்தப்படுகின்றது?

  IHL ஆயுத முரண்பாட்டின் தொடக்கத்திலிருந்து பிரயோகத்திட்குட்படுத்தப்படும். ஆனால் விரோத செயற்பாடுகள் முடிந்த பின்னரும் இது தொடரும்

  IHL செயற்பாடுகள் முற்றிலும் நிறுத்தப்படுவதற்கு 3 நிப்பந்தங்ள் பூர்த்தி செய்யப்படுதல் அவசியம்:
  - இராணுவ செயற்பாடுகள் முடிவுக்குக் கொண்டுவருதல்
  - ஆக்கிரமிப்பு முடிவுக்குக் கொண்டுவருதல்
  - கைதுகள் முடிவுக்குக் கொண்டுவருதல் (யுத்த கைதிகள் மற்றும் சிறையிலிடப்பட்ட சிவிலியன்கள்)

**4 - அடிப்படை கோட்பாடுகள்**

இது இரு பகுதிகளை கொண்டது: ஹேக்கின் சட்டம் - ஜெனிவா சட்டம்

**அ. <<யுத்தத்தின் சட்டம்>> - ஹேக்கின் சட்டம்**

மூன்று அடிப்படை கோட்பாடுகள்

- *இலக்குகள் (யார்?)*

  சிவிலியன் சமூகத்திற்கும் போராளிகளுக்குமிடையில் தெளிவான ஒரு பாகுபாடு உள்ளது. போராளியல்லாத எந்த ஒரு நபரும் சிவிலியனாக கருதப்படுவார்கள். ஏதேனும் சந்தேகம் இருப்பின் அந்நபர் சிவிலியனாகவே கருதப்பட வேண்டும். நிரந்தர மருத்துவ மற்றும் மத அலுவலர்களை தவிர்த்து போராளிகள் ஆயுத குழுக்களின் அங்கத்தவர்களாக கருதப்படுகின்றனர். குறிப்பிடத்தக்க குறியீடுகளை கொண்டு, அவர்கள் பொறுப்புள்ள அதிகாரத்தின் கீழ் இருக்கின்ற, யுத்தத்தின் சட்டத்திற்குட்பட்டவர்களாக மற்றும் ஒளிவுமறைவு இன்றி ஆயுதங்களை சுமக்கின்ற இராணுவ அங்கத்தவர்கள் போராளிகளாக கருதப்படுகின்றனர்.

- *இலக்குகள் (என்ன?)*

குறிப்பாக இராணுவ விடயங்கள் இலக்குகளாக கருதப்படுகினறன(மேலதிக வரைவேடு 1 இன் உறுப்புரை 52). ஒரு இராணுவ தொடர்பற்ற விடயமானது ஒரு சிவிலியன் சம்பந்தமான விடயமாக கருதப்படும். ஒரு இலக்கை இனங்காண்கையில் பாதிக்கப்பட்ட சிவலியன்களைப் பற்றி மனதில் வைத்திருப்பது அவசியம்.

தடைசெய்யப்பட்ட இலக்குகளுள், நாங்கள் காணக்கூடியவை:

- மருத்துவ சேவைகள்
- பொதுமக்களுக்கான வசதிகள் (வீடுகள், மருத்துவமனைகள், பாடசாலைகள், வழிபாட்டு ஸ்தலங்கள், கலாச்சார அல்லது வரலாற்று நினைவுகூடங்கள் போன்றவை)
- சிவிலியன் சமூகம் வாழ்வதற்கு அத்தியாவசியமாக கருதப்படும் இடங்கள் (உணவு, குடிநீர் வசதிகள், விவசாய பகுதிகள்)
- சிவிலியன் சமூகத்திற்கு பாரிய இழப்புகளை உருவாக்கக்கூடிய “அபாயகரமான சக்திகள்” (அணைக்கட்டுகள், பள்ளங்கள் அல்லது அனுசக்தி)

- *வழிகளும் முறைகளும்*

யுத்தத்தின் போது கையாளப்படும் வழிகளும் முறைகளும் வரையறையற்றவையல்ல.

பெரும்பாலான அடிப்படை விடயங்கள் மதிக்கப்பட வேண்டும்: இராணுவ இடங்களை தாக்குதலுக்குட்படுத்தும் தருணங்களிலும், தாக்குதலின் உத்திகளின் பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய சேதங்களிற்கும் (சிவிலியன் சனத்தொகை மற்றும் வசதிகள்) இடையே ஒரு மதிப்பீடு ஒன்று செய்தல் அவசியமாகும். அதிகூடிய கஷ்டத்தையும் தேவையற்ற இழப்புகளையும் உருவாக்கக்கூடிய யுத்த முறைகளையும் ஆயுத பிரயோகத்தையும் இது மேலும் தடைசெய்கின்றது.

குறிப்பிட்ட ஆயுதங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன: இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள், தீபற்றக்கூடிய ஏவுகணைகள் மற்றும் தீக்குண்டு ஆயுதங்கள், டம்டம் சன்னங்கள் (dumdum bullets), கண்பார்வையை தாக்கும் லேசர் ஆயுதங்கள், சிறிய துகள் ஆயுதங்கள் (X கதிர்களிலிருந்து தப்பிக்கக்கூடிய), விஷம், கன்னிவெடிகள் ஆகியவை.

பிழைத்தோரை கொலை செய்யவோ, சிவிலியன்களை பிணைகைதிகளாகவோ இராணுவ இலக்குகளின் கவசமாகவே பாவித்தலுக்காக விடுக்கப்படும் ஆணைகளும் தடைசெய்யப்பட்டுள்ளன.

**ஆ. காயப்பட்டோர், கைதிகள் மற்றும் சிவிலிய சனத்தொகையின் பாதுகாப்பு - ஜெனிவா சட்டம்**
யுத்தத்தில் ஈடுபடுவதை நிறுத்தியுள்ள (காயப்பட்ட போராளிகள் அல்லது கைதிகள்) அல்லது யுத்தத்தில் ஈடுபடாத நபர்களுக்கு (சிவிலியன்) ஜெனிவா சட்டம் பிரயோகப்படும்.

இந்நபர்களுக்கு பின்வரும் உரிமைகள் உண்டு

- விருப்பத்திற்கு மாறான பாகுபாடுகளின்றி, எல்லா சந்தர்ப்பங்களிலும் மனிதாபிமானத்துடன் கையாளப்பட வேண்டும்
- கிளர்ச்சி மற்றும் வன்முறையான நடவடிக்கைகள் எல்லாவற்றிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும்
- உடல் மற்றும் மன ரீதியான கீர்த்தி மற்றும் அவர்களின் உயிர்களுக்கான மதிப்பு
- தங்கள் தன்மானத்திற்கான மதிப்பு, அவர்களது தனிப்பட்ட உரிமைகள் மற்றும் அரசியல், மத மற்றும் வேறு விருப்புகளுக்கான உரிமை

இவ்வுரிமைகள் மாற்ற இயலாதவையாக காணப்படுகிறது.

காயப்பட்டோரும், நோய்வாய்பட்டோரும் சேர்க்கப்பட்டு கவனம் செலுத்தப்பட வேண்டும். முன்னுரிமை, மருத்துவ அடிப்படையிலின்றி வேறு எந்த அடிப்படையின் கீழும் வழங்கப்படக் கூடாது.

பின்வருவன தடைசெய்யப்பட்டுள்ள:

- சரணடைந்த அல்லது சண்டையிலிருந்து விலகிய பகைவன் ஒருவரை கொலை செய்தல் அல்லது காயப்படுத்தல்
- உடலியல் ரீதியான துன்புறுத்தல், மரண தண்டனை அல்லது கொடூரமான இழிவான முறையில் கையாளுதல்
- பாலியல் வன்முறையை பிரயோகித்தல்
- சிவிலியன் சமூகத்தை பலாத்காரமாக இடம்பெயர வைத்தல் (“இன ஒழிப்பு”/ ethnic cleansing)
- 15 வயதிற்கு கீழ்பட்ட சிறுவர்களை படையில் சேர்த்தல்

சர்வதேச ஆயுத முரண்பாட்டில், ஒரு கைது செய்யப்பட்ட போராளி ஒரு குறிப்பிட்ட நிலையினை (“யுத்த கைதி”)பெறுவதற்கான உரிமையை கொண்டுள்ளதுடன் யுத்த செயற்பாடுகள் முடிவுற்ற பின்னர் விடுவிக்கப்பட வேண்டும். கைதிசெய்யப்பட்ட போராளிகள் மற்றும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படும் சிவிலியன்கள் அடிப்படை நீதிச்சேவை உத்தரவாதத்தினை அனுபவிப்பது அவசியம், அதாவது நேர்மையான விசாரணை (பாராபட்சமற்ற நியாயசபை, வழமையான நடைமுறைகள் ஆகியன). கூட்டு தண்டனை தடைசெய்யப்பட்டுள்ளது.

**5 - பாதுகாப்பிற்கான இரு முறைகள்**

**சர்வதேசமயமான ஆயுத முரண்பாட்டின்** போது, விதிகள் பரந்தவையாகவும் முடிவானவையாகவும் காணப்படுகின்றன. நான்கு ஜெனிவா சமவாயங்கள் மற்றும் மேலதிக வரைவேடு I, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நியதிச்சட்டம் (ICC) மற்றும் நடைமுறைச் சட்டம் பிரயோகிக்கப்படும்.

**சர்வதேசமயமல்லாத ஆயுத முரண்பாட்டின்** போது விதிகள் முழுமைக் குறைந்ததாகவே காணப்படும். அரச இறைமை எனும் அடிப்படை மதிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், நான்கு ஜெனிவா சமவாயங்களின் பொது உறுப்புரை 3 மற்றும் மேலதிக வரைவேடு I, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நியதிச்சட்டம் (ICC) மற்றும் நடைமுறைச் சட்டம் பிரயோகிக்கப்படும்.

**பொது உறுப்புரை 3** - குறுகிய ஒரு ஒப்பந்தம் - குறைந்தபட்ச தராதரங்கள்
<< சர்வதேசமற்ற ஆயுத முரண்பாட்டின் போது (...) முரண்பாட்டிற்கான எல்லா கட்சிகளும் பின்வரும் ஏற்பாடுகளுக்கு, குறைந்தபட்ச அளவில், கடப்பட்டுள்ளனர்:

1. ஆயுதங்களை கைவிட்ட ஆயுத குழுக்களின் அங்கத்தவர்கள் மற்றும் சுகமீனமுற்றதனால், காயமுற்றதனால், கைது அல்லது வேறு ஏதும் காரணத்திற்காக சண்டையிட முடியாதவர்கள் உட்பட ஆயுத்த செயற்பாடுகளில் ஈடுபடாத நபர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும், இனம், நிறம், மதம் அல்லது நம்பிக்கை, பால்நிலை, பிறப்பு அல்லது சொத்துரிமை அல்லது இவ்வாறான வேறு அளவுகோள்களின் அடிப்படையில் விருப்பத்திற்கு மாறான பாகுபாடுகளின்றி மனிதாபிமான முறையில் நடத்தப்படுதல் வேண்டும். மேலே குறிப்பிட்ட நபர்கள் சம்பந்தமாக, பின்வரும் செயற்பாடுகள் நேரம், இடம் போன்றவற்றை கணக்கில் எடுக்காது, தடைசெய்யப்பட்டு காணப்படும்:
   - உயிரின் மீதும் உடலின் மீதுமான வன்முறை, குறிப்பாக எல்லா விதமான கொலைகளும், உறுப்புக்குலைத்தல், கொடூரமான முறையில் கையாளுதல் மற்றும் இழிவான முறையில் நடத்துதல்.
   - தனிநபர் தன்மானத்திற்கு எதிரான சீற்றம், குறிப்பாக இழிவாக நடத்துதல்.
   - இன்றியமையாதது என நாகரிகமான போக்கினை கொண்டோரால் வழங்கப்படும் நீதிச்சேவை உத்தரவாதங்களை வழங்கிய பின், ஒரு வழமையான நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டால் அன்றி தீர்ப்புகள் மற்றும் மரணங்கள் நியமித்தல்

2. காயப்பட்டோரும் நோய்வாய்ப்பட்டோரும் சேர்க்கப்பட்டு கவனம் செலுத்தப்பட வேண்டும்.
   - பாகுபாட்டு அடிப்படைகள், தகுதித்தன்மை, சிவிலியன்களின் வரைவிலக்கணம்
   - யுத்தக் கைதிகள் (நிலை, உரிமைகள், பதிவு,...)
   - சிறையிலிடப்பட்ட சிவிலியன்கள் (நிலைமை, உரிமைகள் போன்றவை)
   - சிவிலியன் சனத்தொகையின் கட்டாய இடம்பெயர்வை தடைசெய்தல்
   - பொதுமக்களுக்கான மனிதாபிமான உதவிகள் (அகதிகள், குடும்ப தொடர்புகள்)
   - மருத்துவ சேவைகளின் பாதுகாப்பு

எனினும் இது பாதுகாப்பின்மையை குறிக்கின்றது என்பதாகாது. நடைமுறைச் சட்டம் இன்னமும் பிரயோகத்திற்குட்படும்.

**6 - நடைமுறைப்படுத்தல் ஏற்பாடுகள்**

“எல்லா சந்தர்ப்பங்களிலும் தற்போதுள்ள சமவாயத்தினை மதிப்பதற்கு எல்லா மேன்மைதங்கிய ஒப்பந்த கட்சிகளும் ஒப்புக்கொள்கின்றன.” (நான்கு ஜெனிவா சமவாயங்களுக்கும் பொதுவான உறுப்புரை 1)

நடைமுறைப்படுத்தலில் தடுத்தல் மற்றும் ஒடுக்குதல் ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

தடுத்தல் ஏற்பாடுகள் - IHL(சர்வதேச மனிதாபிமான சட்டம்) சம்பந்தமான அறிவை பரப்புதல்

- தகமையுடைய ஆளணியினை பயிற்சித்தல், இராணுவத்திற்கு சட்ட ஆலோசகர்களை நியமித்தல்
- IHL உடன் இசைவை உறுதி செய்வதற்காக சட்டவாக்கத்தை மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகளை தழுவல்
- சமவாயத்தினை மொழிபெயர்த்தல்

ஒடுக்குதல் ஏற்பாடுகள்

- யுத்தக் குற்றங்களை ஒடுக்குவதற்கு தேசிய நீதிமன்றங்கள் கடப்பட்டுள்ளமை
- மேலதிகாரிகளின் ஒழுங்காற்றல் பொறுப்பு மற்றும் குற்றவியல் பொறுப்பு மற்றும் தவறுகளை நியாயப்படுத்துவதற்கும் ஒடுக்குவதற்குமான இராணுவ அதிகாரிகளின் கடமை
- குற்றவியல் விடயங்களில் அரசுகளுக்கிடையிலான பரஸ்பர உதவிகள்

**7 – IHL இன் கீழ் குற்றவாளிகள் எவ்வாறு தண்டனைக்குட்படுத்தப்படுகின்றனர்?**

யுத்த குற்றவாளிகள் எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டும், இத்துடன் இதை அமுல்படுத்தவதில் அரசுகள் பொறுப்பு கொள்ளுதல் அவசியம்.

“மேன்மைத்தங்கிய ஒப்பந்த கட்சிகள் தற்போதுள்ள சமவாயத்திற்கு எதிரான கடும் முறிவுகளில் ஈடுபடும் அல்லது ஈடுபடுமாறு பணிக்கும் நபர்களிற்கு எதிராக பயனுறுதிவாய்ந்த குற்றவியல் தடைகளை வழங்குவதற்கு தேவையான சட்டவாக்க நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு ஒப்புக்கொள்கின்றன...” நான்கு ஜெனிவா சமவாயங்களிற்கும் பொதுவான உறுப்புரை 49, 50, 128 மற்றும் 146.

ஜெனிவா சமவாயத்தின் கட்சிக்காரராகுகையில் அரசுகள் சமவாயத்திற்கு எதிரான கடும் முறிவுகள் சம்பந்ததமாக சந்தேகத்திற்குட்பட்டோரை தங்களது நீதிமன்றங்களில் தண்டிப்பதற்கு அல்லது தீர்பிற்காக இன்னொரு அரசிற்கு ஒப்படைக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

சர்வதேச நியாயாதிக்க கோட்பாடானது தேசியம், குற்றம் நடந்த இடம் என்பனவற்றை பொருட்படுத்தாது, அரசுகள் கடும் மீறலை நடாத்திய நபர்கள் நீதிக்கு உட்படுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றது.

யுத்த குற்றங்களுக்கென குறிப்பிட்ட விதிமுறைகள் காணப்படுகின்றன:

- அரசின் தலைவருக்கு அல்லது வேறு அரசாங்க ஊழியர்களுக்கு தண்டனையிலிருந்து விலக்கீடு இல்லை
- கட்டளைக்கு பணிதல் என்பது ஒரு காரணம் இல்லை
- தளபதிகளும் மேலதிகாரிகளும் அவர்களின் கீழுள்ளோருக்கு பொறுப்பு கூறல் வேண்டும்
- வரையறை நியதிச்சட்டங்கள் இல்லை (ICC நியதிச்சட்டத்தின் உறுப்புரை 299)

யுத்தக் குற்றங்களுக்கு பல்வேறு சட்ட அடிப்படைகள் உள்ளன

- நிவ்ரம்பர்க் நியதிச்சட்டம்
- ஜெனிவா சமவாயம் மற்றும் மேலதிக வரைவேடு
- ICTY மற்றும் ICTR நியதிச்சட்டம்
- ICC நியதிச்சட்டம் (உறுப்புரை 8)
- தேசிய நியாயாதிக்கம்

**8 - பயங்கரவாதத்தை பற்றி IHL என்ன கூறுகின்றது?**

IHL ஆயுத முரண்பாட்டு சூழ்நிலைகளில் மாத்திரமே பிரயோகிக்கப்படும் மற்றும் சமாதான சூழ்நிலைகளில் செய்யப்படும் பயங்கரவாத செயல்களை கட்டுப்படுத்தாது.

சிவிலியன் மற்றும் போராளிகளுக்கிடையிலான வேறுபாட்டினை அடையாளங்காணுதல் மற்றும் சிவிலியன்கள் மீதான தாக்குதல்களும் வேறுபாடின்றி தாக்குதல் ஆகியவற்றை தடைசெய்தல் போன்றவை மனிதாபிமான சட்டத்தின் கருவாக காணப்படுகின்றது.

IHL பின்வரும் நடவடிக்கைகளை தடை செய்கின்றது:

- சிவிலியன் சனத்தொகையின் மத்தியில் பீதியை உண்டுபண்ணல்
- பொதுமக்களின் பொருட்கள் மீதான தாக்குதல்கள்
- வணக்கஸ்தலங்கள் மீதான தாக்குதல்கள்
- அபாயகரமான சக்திகளை கொண்ட மற்றும் அவ்வாறான வசதிகளைக் கொண்ட இடங்கள் மீதான தாக்குதல்கள்
- பிணயக் கைதிகளாக பிடித்தல்
- யுத்த நடவடிக்கைகளில் தற்போது ஈடுபடாதவர்கள் மற்றும் முற்றிலும் ஈடுபடாதவர்களை கொலை செய்தல்

**9 - இலங்கையை பிணைக்கும் சர்வதேச IHL ஒப்பந்தங்கள்**

1949: நான்கு ஜெனிவா சமவாயங்கள் (உறுப்புரை 3 தன்நிறைவுள்ள, சுய-நிறைவேற்று மற்றும் துல்லியமாக இருப்பதன் காரணத்தால் நேரடியாக பிரயோகிக்கப்படகூடியது)

1954: ஹேக் சமவாயம் ஆயுத முரண்பாட்டின் போது கலாச்சார சொத்துக்களின் பாதுகாப்பிற்காக (உறுப்புரை 19 இன் படி உள்நாட்டு முரண்பாட்டின் போதான பகுதியளவிலான பிரயோகத்திற்கு)

1980: சில பாரம்பரிய ஆயுதங்களின் பாவனையை தடைசெய்யும் அல்லது கட்டுப்படுத்தும் சமவாயம் (உள்நாட்டு முரண்பாடுகள், உறுப்புரை 1 (3))

2000: ஆயுத முரண்பாட்டில் சிறுவர்களின் ஈடுபாடு சம்பந்தமான CRC இற்கான மேலதிக வரைவேடு

## அமர்வு 1 தொடர்பான கலந்துரையாடல்

பட்டறையில் பங்குபற்றியவர்களின் கவனத்தை ஈர்த்த இரு விடயங்கள் மீது கலந்துரையாடல் கவனம் செலுத்தியது: (1) சட்டங்கள், தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாதது மற்றும் (2) அரச தரப்பற்றவர்கள் மற்றும் யுத்த நிறுத்தம் சம்பந்தமாக சில கடினமான IHL விடயங்கள்.

1. பங்குபற்றியவர்கள் ஒப்பந்த கண்காணிப்பு உறுப்புகளுக்காக குறிப்பாக இலங்கையில் மனித உரிமைகள் மீறல்களை விசாரணைக்குட்படுத்தும் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு, நிழல் அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான பரந்த நடவடிக்கைகள் உள்ளடக்கிய அவர்களின் அனுபவங்களை பற்றி கலந்துரையாடினார்கள். நிபுணர்கள் குழுக்கள் மற்றும் ஆணைக்குழுக்களின் கண்டுபிடிப்புகளை கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லாதது தொடர்பாகவும் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீள்பார்வைக்குட்படுத்த அரசாங்கம் தவறியமை தொடர்பாகவும் இவர்கள் வருத்தத்தை தெரிவித்தனர். பின்னர் இலங்கையின் கட்டமைப்புகளுக்குள் கடமையாற்றும் பிரச்சனைகள் சம்பந்தமான கருத்துக்களும் வெளியிடப்பட்டது. மனித உரிமைகளானது, கோட்பாட்டின் அர்ப்பணிப்பிற்கில்லாது சர்வதேச சமூகத்தை அமைதிப்படுத்தும் நோக்கிற்காக மட்டும் அரசால் நிறுவப்பட்டுள்ள எண்ணற்ற நிறுவனங்கள், அரசியலமைப்பினால் திணிக்கப்பட்டுள்ள நிலைப்பாட்டின் காரணத்தால் அரசியலமைப்பை மீறும் சட்டங்களை சவால்விடுப்பதில் உள்ள பிரச்சனைகள், அரசாங்கமே சகல வழக்குகளையும் தொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தால் வழக்குத் தொடர்வதிலுள்ள பிரச்சனைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் இதன் செயற்பாடுகளை அணுகுவதற்கு வாய்ப்பில்லாமை போன்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரைப்பாடிய அதேவேளை, கலாச்சார நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ள

பிரபலங்களை மனித உரிமை இயக்கத்திற்குள் கொண்டு வருவது ஒரு மேலதிக பெறுமதியை சேர்க்கும் என கருதப்பட்டது. உள்நாட்டில் வழக்குத் தொடர்வதில் தடங்கல்கள் ஏற்படின் வேறு வழிகளை பின்பற்றுவது பயனளிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டது.

2. IHL எவ்வாறு அரச தரப்பற்றோர் மீது பிரயோகிக்கப்படலாம் மற்றும் அதனை பின்பற்றுவதை நாங்கள் எவ்வாறு உறுதி செய்யலாம்?

IHL ஆல் பிணைக்கப்பட்ட கட்சிகள் சம்பந்தமான வரைவிலக்கணம் மற்றும் IHL சம்பந்தமாக செய்யப்பட வேண்டிய கூடுதலான நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடல் தொடர்ந்தது, குறிப்பாக IHL எவ்வாறு செயற்படுகின்றது என்பதை மக்களிற்கு அறிவூட்டல் மற்றும் அதன் மூலம் நீதி சம்பந்தமாக கூடுதலான மதிப்பினை உத்தரவாதம் அளித்தல். மற்றைய நாடுகளில் அரச தரப்பற்றவர்கள் எவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளனர் என்பதை மக்களுக்கு அறியத்தருதல் (குறிப்பாக உகண்டாவின் மீதான ICC வழக்குத் தொடரல்). மேலும், எல்லா நபர்களும் சில தராதரதங்களை பின்பற்றும் முகமாக உருவாக்கக்கூடிய பாதுகாப்பு வலயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. IHL இன் முறிவுகளுடன் தொடர்புற்ற பயணத் தடைகள் போன்ற இராஜதந்திர முறைகளும் கலந்துரையாடப்பட்டது.

யுத்த நிறுத்தங்களை பொறுத்தமட்டில், ஒரு உத்தியோகபூர்வ ஆவணத்தாலன்றி, முரண்பாட்டு சூழ்நிலை ஒன்று தொடர்கின்றது என்பதை எடுத்துக்காட்ட முடியுமாயின் IHL இன் பிரயோகம் உறுதி செய்யப்படலாம்.

இக்கலந்துரையாடலின் உண்மையான தொனி நம்பிக்கையற்று காணப்பட்டபோதிலும், இறுதியில் நம்பிக்கையுடன் முடிவுற்றதை போல் காணப்பட்டது. முதலில், பலதரப்பட்ட நிபுணத்துவ குழுக்கள் மற்றும் காலத்துக்குகாலம் வெளியிடப்படும் அறிக்கைகளின் காரணத்தால், நாட்டின் மீது தொடர்ச்சியான ஒரு பார்வையை வைத்திருப்பது முடியுமாகும். இரண்டாவதாக, பங்குபற்றியவர்களின் சொந்த செயற்பாட்டு முறைகள் கலந்துரையாடப்பட்டு குறிப்பாக ஒரு சூழ்நிலைக்காக மட்டும் செயற்படாது தொடர்ச்சியாக நிலைபேண் தன்மையுடன் செயலாற்றுவதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. இறுதியில், அவர்கள் எதிர்பார்ப்பதை விட கூடுதலான ஒரு தாக்கத்தினை தங்களது ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் ஈட்டும் என்பதை பங்குபற்றியவர்கள் புரிந்து கொண்டனர்.

## அமர்வு 2
## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உலகலாவிய சர்வதேச நியாயாதிக்கத்திற்கான அறிமுகம்

தலைமை: ரமணி முத்தெட்டுவேகம

பகுதி I

- **ICC தொடர்பான வரலாற்று மீள்பார்வை**

வளப்பகிர்வாளர்: ரெனோட் கலன்ட் (பெல்ஜியம், FIDH)

இவ்வுரையானது "உரோமிற்கான பாதை" சம்பந்தமாக கவனம் செலுத்தியது. முரண்பாட்டு சூழ்நிலையில் நடக்கும் குற்றங்களை கையாளுவதற்கான ஒரு நிரந்தர சர்வதேச நீதிமன்றத்தை ஸ்தாபிப்பது சம்பந்தமாக வழங்கப்பட்ட முதல் முன்மொழிவு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றினை இது உள்ளடக்கியது. கய்சர் மற்றும் ஜர்மன்களை விசாரணைக்குட்படுத்த முயன்ற, வேளைக்கேற்ப உருவாக்கப்பட்ட நியாயசபைகள், நிவ்ரம்பர்க் விசாரணைகள், முந்திய யுகொஸ்லாவியா மற்றும் ருவாண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாயசபைகள், மற்றும் சியேரா லியோனின் விசேட நீதிமன்றம் போன்றவை சம்பந்தமான அறிமுகமும் செய்யப்பட்டது. கலந்துரையாடலானது, எவ்வாறு இவை ஸ்தாபிக்கப்பட்டன என்றும், அவற்றின் அரசியல் மற்றும் ICC உடனான ஒப்பீடு போன்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும் 1998 இல் உரோம நியதிச்சட்டத்தின் வலுவாக்கல், 60 ஆவது வலுவாக்கலின் பின்னர் 2002 இல் அமுலுக்கு வந்தமை மற்றும் நீதிமன்றத்தின் தனிநபர்களை விசாரணைக்குட்படுத்துவதற்கான தகைமை என்பவை சம்பந்தமான ஒரு கலந்துரையாடலும் எழுந்தது.

பகுதி II

- **ICC இனது செயன்முறை (நியாயாதிக்கம், பூர்த்தி செய்கின்ற தன்மை மற்றும் விசை செயன்முறை/ trigger mechanism)**

வளப்பகிர்வாளர்கள்: நெஹாமா ஜயவர்தன, CSHR

ICC இனது முக்கியத்துவமான சிறப்பம்சங்களை (அதன் நிரந்தரத் தன்மை - உதாரணமாக ஒரு சூழ்நிலைக்கேற்ப மற்றுமே பதிலளிக்காமை, வெற்றியாளனுக்கு மட்டுமே நீதியென்றதிலிருந்து அப்பாற்பட்டதாக அமைகின்றது); நீதிமன்றம் விசாரணைக்குட்படுத்தும் குற்றங்கள் மற்றும் ICC இன் நியாயாதிக்கம் செயற்படும் முறைகளும் நிலைப்பாடுகளும் ஆகியவற்றின் மீது அளிக்கையானது கவனம் செலுத்தியது. இதனையடுத்து ICC இனது அடிப்படை கோட்பாடான ஈடுசெய் தன்மை பற்றியும் குற்றவியல் சட்டத்தின் பொது அடிப்படைகளை பற்றியும் அளிக்கை கவனம் செலுத்தியது. பின்பு நீதிமன்றத்தின் கட்டமைப்பு சுருக்கமாக கலந்துரையாடப்பட்டது. நீதிமன்றத்திற்குள்; குற்றங்களின் வரைவிலக்கணத்திற்குள்; நீதிமன்றத்தை கட்டுப்படுத்தும் விதிகளுள்; திறமைமிக்க நீதிமன்ற செயற்பாடுகளுள் பால்நிலை சமநிலைக்காக உருவாக்கப்பட்டுள்ள விசேட கட்டமைப்புகள் ஆகிவற்றினூடாக எவ்வாறு பால்நிலை உள்ளடக்கப்படுகின்றது என்பதை பற்றியும் ஒரு சுருக்கமான மீள்பார்வையை வழங்குவதிலும் உரையானது கவனம் செலுத்தியது.

- **ICC இன் நியாயாதிக்கத்திற்குள் காணப்படும் குற்றங்கள் மற்றும் குற்றவியல் சட்டத்தின் பொது அடிப்படைகள்**

வளப்பகிர்வாளர்கள்: நெஹாமா ஜயவர்தன, CSHR

இனஅழிப்பு, மனித வர்க்கத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்த குற்றங்களை உரையானது மிக விரைவாக அறிமுகப்படுத்தியது. உரையின் இப்பகுதி பங்குபற்றியவர்களின் மத்தியில் மிகுந்த ஈடுபாட்டினை உருவாக்கியது.

பின்னர் கலந்துரையாடலானது வலுத்தாக்கல் என்ற குற்றத்தை பற்றியும் சர்வதேச சமூகமானது எவ்வாறு ICC இன் கீழ் விசாரணைக்குட்படுத்த கூடிய ஒரு குற்றமென கருதியும் ஐ.நா சிறப்பரிமை பத்திரத்தால் இக்குற்றத்திற்கான வரைவிலக்கணம் ஒன்றினை வழங்கும் மட்டும் காத்திருப்பதென முடிவு செய்துள்ளது. இதன்படி பாதுகாப்பு சபைக்கு வரைவிலக்கணத்தின் மீது கூடிய சக்தியினை கொண்டுள்ளமை அரசியல் ரீதியாக அபாயகரமான ஒன்றாகும். தற்போது வேறொரு தெரிவாக பாதுகாப்பு சபையின் அங்கீகாரத்திற்கு காத்திராது இவ்விடயம் சம்பந்தமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஆலோசனையை பெறுவதாகும். அதேவேளை குற்றத்தின் வரைவிலக்கணம் மற்றைய மூன்று குற்றங்களை போன்று மிக ஆழமான முறையில் விளக்கப்பட வேண்டுமா என்பது சம்பந்தமான ஒரு விவாதம் நடைபெற்றுவருகின்றது (உதாரணமாக: வலுதாக்கல் என்று கருதப்படும் சில சந்தர்ப்பங்களின் ஒரு பட்டியலை உள்ளடக்கிய) என்ற கருத்துக்களும் கலந்துரையாடலின் தொனியாக இருந்தது.

- **உலகலாவிய சர்வதேச நியாயதிக்க செயன்முறையினை பாவனைக்குட்படுத்துதல்: FIDH இன் அனுபவம்**

வளப்பகிர்வாளர்கள்: கதரின் பூத், FIDH இன் ஆசிய பகுதி, டெல்பின் காலன்ஸ், FIDH இன் சர்வதேச நீதிப் பகுதி

பல பங்குபற்றுநர்களுக்கு புதிதான ஒரு விடயத்தை இவ்உரையானது அறிமுகப்படுத்தியது.

<u>1 - உலகலாவிய நியாயாதிக்க அடிப்படையின் வரைவிலக்கணம் மற்றும் தோற்றம்</u>

எந்தவொரு அரசின் தேசிய அதிகாரிகளுக்கு புலன்விசாரணைக்கும், சாட்சியங்கள் இருக்கும் இடங்களில் கொடூரமான சர்வதேச குற்றங்களை அதன் ஆட்சி எல்லைக்கு அப்பால் நடைபெற்ற, அந்த அரசின் மீது குற்றம் சுமத்தப்பட்ட, ஆனால் அரசிற்கு எந்த ஒரு தொடர்பும் இல்லாத போதிலும், குற்றஞ்சுமத்திய நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர உலகலாவிய நியாயாதிக்க அடிப்படையின் கீழ் அனுமதி வழங்கப்படுகின்றது. இனஅழிப்பு, மனித வர்க்கத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்த குற்றங்கள் போன்றவை முழு சர்வதேச சமூகத்தினது அடிப்படை கவனத்தின் மீதும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்ற காரணத்தை தழுவியே இந்த அடிப்படை உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி குற்றமானது உலகலாவிய நியாயாதிக்கத்தை பிரயோகிக்கும் அரசுடன், சந்தேக நபரின் அல்லது பாதிக்கப்பட்டவரின் தேசியம் சம்பந்தமாக அல்லது அரசின் சொந்த விருப்பிற்கு தீங்கு விளைக்கப்படும் என்ற காரணங்களோடு தொடர்புற்றிருத்தல் அவசியம் என்ற நிர்பந்தம் ஏதும் இல்லை.

இவ்வடிப்படை பல நூற்றாண்டுகளாக சர்வதேச சட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த போதிலும் ஸ்பையின் நாட்டின் நீதிபதி கர்சொன் பினோஷே இற்கு எதிராக உலகலாவிய நியாயாதிக்கத்தின் கீழ் 1998 இல் வழக்குத்தொடர்ந்ததை அடுத்தே தண்டனையிலிருந்து விலக்கீட்டுக்கு எதிராக பாவனைக்குட்படுத்தப்படும் ஒரு பயனுறுதிவாய்ந்த கருவியாக மாறியது. இனஅழிப்பு, மனித வர்க்கத்திற்கு எதிரான குற்றங்கள், யுத்த குற்றங்கள் மற்றம் துன்புறுத்தலால் பாதிப்புக்குட்படுத்தப்பட்டோர், தங்களது சொந்த நாடுகளில் நடைமுறையில் ஒரு நீதிச் செயன்முறை இல்லாத காரணத்தால் அல்லது அரசு வழக்குத்தொடர மறுக்கும்

காரணத்தால், உலகலாவிய நியாயாதிக்கம் நீதியை பெற்று கொள்வதற்கான ஒரே வழியாக இது அமைகின்றது.

## 2 - உலகலாவிய நியாயாதிக்கத்தை வழங்கும் பல்வேறுபட்ட சமவாயங்கள்

சில சர்வதேச ஒப்பந்தங்கள் அரச தரப்பினை உலகலாவிய நியாயாதிக்கத்தை அமுல்படுத்துமாறு கோருகின்றது.

உதாரணமாக, 1984 டிசெம்பர் 10 இல் ஏற்கப்பட்ட துன்புறுத்தல் மற்றும் கொடுமையான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவுபடுத்தி நடத்துதல் அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயத்தின் (**துன்புறுத்தலிற்கு எதிரான சமவாயத்தின்**) உறுப்புரை 7 (1), *"ஆட்சி எல்லையிலுள்ள ஒரு அரச தரப்பின் நியாயாதிக்கத்தின் கீழ் ஒரு நபர் உறுப்புரை 4 இல் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு குற்றத்தை செய்துள்ளார் என குற்றம் சுமத்தப்படின், உறுப்புரை 5 இல் கருதப்பட்ட விடயங்களில், தன்னை அதன்படி வேற்றரசுக்கு ஒப்படைக்காத தருணத்தில் வழக்கினை தகுதிவாய்ந்த ஒரு அதிகாரிக்கு வழக்குத் தொடர்வதன் நோக்கோடு ஒப்படைத்தல் வேண்டும்"*.என வழங்குகின்றது.

நான்கு **ஜெனிவா சமவாயங்களும்** மேலும் உயர் ஒப்பந்த கட்சிகள் *"கொடும் முறிவுகளை செய்யதார் என சாத்தப்பட்ட அல்லது செய்வதற்கான கட்டளையிட்ட நபர்களை தேடி அந்நபர்களின் தேசயத்தினை பொருட்படுத்தாது தனது நீதிமன்றங்களின் முன் நிறுத்தல் வேண்டும். தனது சொந்த சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் படி விரும்பமாயின் அந்நபர்களை இன்னொரு உயர் ஒப்பந்த தரப்பொன்றிற்கு அந்த உயர் ஒப்பந்த கட்சி ஒரு முதல் தோற்ற (பிரிமா பசி/ prima facie)வழக்கொன்றை தெளிவாக்கியிருப்பின் வழக்குத்தொடர்வதன் நோக்கோடு ஒப்படைக்கப்படலாம்"*[4].
(சமவாயம் 1 இன் உறுப்புரை 49; சமவாயம் 2 இன் உறுப்புரை 50; சமவாயம் 120 இன் உறுப்புரை 129; சமவாயம் 4 இன் உறுப்புரை 146)

மிக அண்மையில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட மனித உரிமைகள் சபையின் முதலாம் அமர்வில் யூன் 23, 2006 இல் தழுவப்பட்ட, **நடைமுறைப்படுத்தப்பட்ட காணாமற் போதல்களிலிருந்து எல்லா நபர்களையும் பாதுகாத்தல் சம்பந்தமான ஐ.நா சமவாயம்** நடைமுறைப்படுத்தப்பட்ட காணாமல்போதல்கள் சம்பந்தமாக ஆராய்வதற்கும் வழக்குத்தொடர்வதற்கும் உலகலாவிய நியாயாதிக்கத்தை பயன்படுத்தும் படி எடுத்துரைக்கின்றது.

நடைமுறைப்படுத்தப்பட்ட காணாமற் போதல்களிலிருந்து எல்லா நபர்களையும் பாதுகாத்தல் சம்பந்தமான சர்வதேச சமவாயம்: உறுப்புரை 9 (2): << *ஒவ்வொரு அரச தரப்பும் நடைமுறைப்படுத்தப்பட்ட காணாமற்போதல்கள் குற்றத்தின் மீது நியாயாதிக்கத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சார்த்தப்பட்ட குற்றவாளி அதன் நியாயாதிக்கத்தின் கீழுள்ள ஆட்சி எல்லைக்குள் இருப்பின் அதன் சர்வதேச கடப்பாடுகளின் பிரகாரம் வேற்றரசிற்கு ஒப்படைக்க அல்லது அவனை; அவளை நியாயாதிக்கம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வதேச குற்றவியல் நியாயசபைக்கு சரணடையும் படியும் செய்யலாம்.* >>

மற்றைய சர்வதேச கருவிகள் உலகலாவிய நியாயதிக்கம் எடுப்பதற்கான அரசுகளின் கடப்பாடுகளை பற்றிய குறிப்புகளை உள்ளடக்குகின்றன. சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்களாக கருதப்படும் சர்வதேச மனித உரிமைச் சட்டத்தின் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கொடூரமான மீறல் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டோரினது புனருத்தாரணம் உரிமை சம்பந்தமாக ஐக்கிய நாடுகளின் அடிப்படைகளை கூறுவது என்னவெனின் *"பிரயோகத்திற்குட்படக்கூடிய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது வேறு சர்வதேச சட்டத்தின் கடப்பாடுகளால் வழங்கப்படுகின்றதன்படி அரசுகள் உள்ளடக்கல் அல்லது தங்களது*

[4] ஜெ.ச I, உறுப்புரை 49, ஜெ.ச II, உறுப்புரை 50, ஜெ.ச III, உறுப்புரை 129, ஜெ.ச IV, உறுப்புரை 146

*உள்நாட்டு சட்டத்தினுள் உலகலாவிய நியாயாதிக்கத்திற்கான தகுந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்”*[5].

2005 இன் தண்டனையிலிருந்து விலக்கீட்டை எதிர்த்தல் சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் கோட்பாடுகள் அரசுகள் மீது “பயனுறுதிவாய்ந்த நடவடிக்கைகள் எடுத்தல் அவசியமாகும். நடைமுறை மற்றும் ஒப்பந்த சட்டத்தின் பிரயோகத்திற்குட்பட்ட ஒப்பந்தங்களுடன் இசைந்த சர்வதேச சட்டத்தின் கீழ் பாராதூரமான குற்றங்கள் மீதான உலகலாவிய நியாயாதிக்கத்தை நீதிமன்றங்களுக்கு அமுல்படுத்துவது தேவையாகும்”[6].

**3 - FIDH இன் அனுபவம்**

- **FIDH சட்ட செயற்பாட்டுக் குழு**

FIDH சட்ட செயற்பாட்டுக் குழுவானது (LAG), FIDH இற்கு தொடர்புற்ற மற்றும் FIDH ஆல் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட 50 இற்கு மேற்பட்ட உலகெங்குமுள்ள தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களிலிருந்து சட்டத்தரணிகள், நீதிவான்கள் மற்றும் சட்ட ஆலோசகர்கள் கொண்ட ஒரு வலைப்பின்னலாகும்.
அதன் செயற்பாடானது:

- பாதிக்கப்பட்டோரிற்கு உதவி வழங்கல்: கொடூரமான மனித உரிமைகள் மீறல்களுக்குட்பட்டோரிற்கு தேவையான நேரடி சட்ட ஆலோசனை வழங்கல். சந்தேகப்பட்ட குற்றம் செய்தோரிற்கு எதிரான வழக்கு விசாரனைகளை தொடர்வதற்கு தேவையான பிரதிநிதித்துவம் மற்றும் உதவிகள். பாதிக்கப்பட்டோரினது உரிமைகளான நீதியும் நேர்மையும் மிக்க விசாரணையை பெறுவதற்கும் புனருத்தாரண நடவடிக்கைகளை பெறுவதையும் நடைமுறைப்படுத்துவதற்கு LAG செயற்படுகின்றது.
- மனித உரிமைகளிற்கெதிரான கடுமையான மீறல்களுக்கு பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு தேவையான சட்ட செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு அவசியமான சட்ட மற்றும் உண்மையான எல்லா கூறுகளையும் இணைத்தல்.
- மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்பானவர்களுக்கான தேடலில் ஈடுபட்டுள்ள தேசிய சட்ட செயன்முறைகளின் மீதான நடவடிக்கைகளை வலுப்படுத்தும் முகமாக தேசிய மற்றும் சர்வதேச நீதிமன்றங்களின் முன் சட்ட செயற்பாடுகளை ஆரம்பித்தல். LAG குறிப்பாக உலகலாவிய நியாயாதிக்கத்தை செயற்படுத்துகின்றது.
- உரோம நியதிச்சட்டத்தின் வலுவாக்கலை ஊக்குவிப்பதிலும் தேசிய நடைமுறைப்படுத்தல் சட்டவாக்கத்தினை செயற்படுத்துவதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச நியாயாதிக்கத்தின் ஈடுசெய் தன்மையினை கட்டியெழுப்பல்
- சர்வதேச குற்றவியல் சட்ட செயன்முறைகளை FIDH அங்கத்துவ நிறுவனங்களுக்கும் அதன் உள்நாட்டு நட்பு நிறுவனங்களுக்கும் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்திலுள்ள அதன் செயற்பாடுகளை பாவனைக்குட்படுத்துவதை தெளிவாக எடுத்துரைத்தல்.

இந்தவொரு கட்டமைப்பில் LAG, FIDH ஆகியவை ஆர்ஜன்டினா, சிலி, கொங்கோ, ஈராக், மொரிடானியா, ருவாண்டா, சட், துனிசியா, அல்ஜீரிய மற்றும் லிபியா ஆகிய நாடுகளின் பாதிப்புக்குட்பட்டோரை பிரான்ஸ், பெல்ஜியம், செனகால் மற்றும் ஜெர்மனியின் உலகலாவிய நியாயாதிக்க செயற்பாட்டினை பாவித்து நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு உதவியுள்ளது. உதாரணமாக, FIDH ஆனது பினோஷே, ஹிசெனே ஹாப்ரே மற்றும் கடாபி ஆகியோரிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

[5] அடிப்படை 4

[6] அடிப்படை 21இ *உலகலாவிய மற்றும் சர்வதேச நியாயாதிக்கம் சம்பந்தமான சர்வதேச சட்ட அடிப்படைகளின் பயனுறுதிவாய்ந்த தன்மையினை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள்*

- **உதாரணமாக இரு விடயங்கள்**

இவ்விரு விடயங்களும் குறிப்பாக உலகலாவிய நியாயாதிக்கத்தை மேற்கோள் காட்டுவதற்கே முக்கியமாக அமைகின்றது.

முதல் விடயம் கொங்கோவில் (பிராசாவில்) நடந்த "கடற்கரையில் காணாமற்போனோர்" என்று பிரபல்யமாக குறிப்பிடப்படுகின்றது. இங்கு பல சட்ட நடவடிக்கைகளுக்கும் அதன் இடைத்தொடர்பும் எமக்கு அறிமுகமானது. 2001இல் பிரான்ஸில் FIDH மற்றும் இரு அங்கத்துவ நிறுவனங்களும் இச்சம்பவத்திற்கு பொறுப்பு கூற வேண்டும் என அடையாளங்காணப்பட்ட பல்வேறுபட்ட நபர்களுக்கு எதிராக முதன் முறையாக முறைபாடு செய்யப்பட்டது. இதில் ஒருவர் இராணுவத்தின் ஜெனரல் இன்ஸ்பெக்டரான ஜெனரல் நோர்பட் தபிரா சம்பவம் நடந்த பொழுது பிரான்ஸில் தங்கியிருந்தார். இவரிற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்ட போதும் இவர் கொங்கோவிற்கு திரும்பியதையடுத்து வேற்றரசிற்கு ஒப்படைக்குமாறு விடுத்த கோரிக்கைகள் விடுக்கப்பட்டது. அதற்கு இசையாது ஆனால் அவரின் கைது சம்பந்தமாக ஒரு சர்வதேச எழுத்தாணை ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை இன்னொரு சந்தேக நபரான ஜோன் பிரான்சுவா தென்கு கொங்கோவின் பொலிஸ் தலைவர் பரிஸிற்கு 2004, மார்ச் இல் வந்ததையடுத்து ஏப்ரல் 1 அன்று கைது செய்யப்பட்டு குற்றம் சுமத்தப்பட்டார். பின்னர் இவர் ஏப்ரில் 3ஆம் திகதியன்று நாட்டை விட்டு வெளியேறினார். தற்போது பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுக்கு ஒரு பயனுறுதிவாய்ந்த தீர்வினை அங்கீகரிப்பதற்கும் உத்தரவாதம் அளிப்பதன் நோக்குடனும் நடவடிக்கைகளை வெற்றியாக்கிய ஒரு தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளனர். பிரான்ஸின் உயர் நீதிமன்றத்தில் இச்செயற்பாடு இன்னும் நிறைவேறாது காணப்படுகின்றது.

இதேவேளை கொங்கோ நாட்டிலும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2000 இல் ஆராயப்பட்டு 15 குற்றவாளிகளுக்கு எதிராக 2005 (வழக்கு முகம்கொடுக்க நேரிட்ட கடும் சவால்கள் மற்றும் சாட்சிகள் அனுபவித்த அச்சுறுத்தல்களையும் மீறி) இல் வழக்கு தொடரப்பட்டது எனினும் இவர்கள் எல்லோரும் ஒரு மாதத்திற்குள் விடுதலை செய்யப்பட்டனர். எனினும் நீதிமன்றம் 85 இற்கும் மேலானோர் காணாமற் போயுள்ளனர் என்பதை அடையாளங்கண்டு அரசை ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 15,000 யுரோ செலுத்துமாறு கட்டளையிட்டது.[7]

இத்துடன் காணாமற்போதல்கள் சம்பந்தமான ஐ.நா செயற்பாட்டுக் குழுவானது FIDH மற்றும் அதன் உள்நாட்டு பங்காளிகளால் வழங்கப்பட்ட தகவல்களை பாவித்து கொங்கோ அரசிடம் காணாமற்போதல் விடயங்களை பற்றின தகவல்களை கோரவும் பயன்படுத்தியது. நபர்களின் நிலைப்பாடு சம்பந்தமாக ஒரு விசாரணையை மேற்கொள்ளும்படி செயற்பாட்டுக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இரண்டாவது உதாரணம்இ FIDH மற்றும் அதன் பங்காளி நிறுவனங்களால் மொன்பெலியே நியாயசபையின் (டிரய்பியுனல் த குரொந்த் இன்ஸ்தொன்ஸ்/ *Tribunal de Grande Instance*) முன் மொரிடேனியன் தலைவர் **எலி ஊல்ட் தா** வின் மீது துன்புறுத்தல் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளே. இவர் முதலில் கைதுசெய்யப்பட்ட பொழுதும் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இவர் மொரிடேனியாவிற்கு திரும்பினார். எனினும் நடவடிக்கைகளை நிறுத்தும்படி அவரின் சட்டத்தரனிகளின் தொடர்ச்சியாக விடுத்த விண்ணப்பங்களை பொறுட்படுத்தாது விசாரிக்கும் நீதிபதி அவரை கைது செய்யும் படி ஆணையும் விதித்தார். இவர் நீதிமன்றத்திற்கு வராதிருந்தும், துன்புறுத்தல் குற்றத்திற்கு 10 வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

கலந்துரையாடல்: அடுத்த நாளின் அளிக்கையின் பின்னர் நடைபெறும் கலந்துரையாடலுடன் இன்றைய விடயம் சம்பந்தமாகவும் கலந்துரையாடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. பல சிக்கலான யோசனைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டதனால் பங்குபற்றியவர்களுக்கு இவ்வமர்வு கடினமாக காணப்பட்டது. மிகுந்த

[7] கொங்கோவானது பிரான்ஸில் கொங்கலீஸின் விசாரணையை அனுமதித்ததிற்காக ICJ இன் முன் பிரான்ஸிற்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வழக்கு இன்னும் தொடர்கின்றது. எனினும், பிரான்ஸில் குற்றத் தீர்ப்பினை விலக்குமாறு கொங்கோ விடுத்த இடைக்கால விண்ணப்பம் ICJ இனால் மறுக்கப்பட்டது.

எண்ணிக்கையானோர் ICC இனது அரசியல் வலுதாக்கல் குற்றத்திற்கான வரைவிலக்கணம் இல்லாதமை மற்றும் உலகலாவிய நியாயாதிக்க அடிப்படையை இலங்கையில் பாவனைக்குட்படுத்தல் சம்பந்தமாக கவனம் செலுத்த மிகவும் ஆவலாக இருந்தனர்.

## அமர்வு 3
## பாதிக்கப்பட்டோரினது உரிமைகள்/ தீர்வுகள்: ICC, கொடூரமான மனித உரிமை மீறல்களுக்குட்பட்டோருக்கான தேசிய மற்றும் சர்வதேச தீர்வுகள்

தலைமை: ரமணி முத்தெட்டுவேகம

பகுதி I

- **ICC இன் முன் பாதிக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் நிலை சம்பந்தமான மீளாய்வு**

வளப்பகிர்வாளர்கள்: நெஹாமா ஜயவர்தன, சட்டத்தரணி, ஆராய்ச்சி அதிகாரி, CSHR

பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தமான வரைவிலக்கணம் மற்றும் ICC இனுள் நடவடிக்கைகளில் அவர்களின் பங்களிப்பின் வழிமுறைகள் பற்றி இவ்வளிக்கை சுருக்கமான ஆனால் பயனுள்ள முறையில் செய்யப்பட்டது. சிறுவர்களின் விசேட தேவைகள், வயோதிபர், அங்கவீனங்களைக் கொண்டோர் மற்றும் பாலியல், பால்நிலை வன்முறைக்குட்பட்டோர் சம்பந்தமான விதி 86இன் வழக்குத்தொடருநரின் காரியாலயத்திலுள்ள பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கான பகுதி பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பை எடுத்துரைக்கும் விதி 68 சம்பந்தமான விசேட குறிப்பிடப்பட்டது.

இதனடுத்து, ICC இன் கீழ் காணப்படும் புனரமைப்பு சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டது. நிவாராணம் தொடர்பாக மட்டும் கட்டுப்படாது, நீதிமன்றமானது நிவாரணத்தினை அழிப்பதன் முன்னர் பாதிக்கப்பட்டவரின் கருத்தினையும் கவனத்திற்கொள்ளுதல் அவசியம் எனவும் அற நிதியத்திற்கான அணுகல் சம்பந்தமாகவும் அளிக்கை கவனம் செலுத்தியது.

பகுதி II

- **சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சட்டத்தின் முன்னேற்றங்கள் மற்றும் இலங்கையின் செயற்பாடுகளில் அது பொருந்தும் முறை**

வளப்பகிர்வாளர்: சுனிலா அபயசேகர, நிறைவேற்று அதிகாரி, INFORM

இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் அவர்களின் செயற்பாடுகளின் மூலம் கையாளுகின்ற சூழ்நிலையுடன் குறிப்பாக பெண்களுக்கெதிரான குற்றங்களை மையப்படுத்தி சர்வதேச குற்றவியல் சட்டம் மற்றும் ICC இனது முன்னேற்றங்களை இவ்வுரையானது பிணைத்தது.

ICTR மற்றும் ICTY இன் முன்னுள்ள பெண்களுக்கெதிரான குற்றங்கள் சம்பந்தமாக உள்ள முக்கிய வழக்குகளின் மற்றும் ICC இன் முன்னுள்ள அண்மைக்கால வழக்குகள் சம்பந்தமான சுருக்கமான மீளாய்வினை முன்வைத்தார்.

இதன் பின்னர் பாலியல் வன்முறையை அரசு அங்கீகரிக்க மறுப்பது இதனூடாக கொலை செய்யப்பட்ட பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்பட்டிருப்பதை பொருட்படுத்தாததன் பிரச்சனை கலந்துரையாடப்பட்டது. பாலியல் வல்லுறவு ஒரு யுத்தக் குற்றம் மற்றும் மனித வர்க்கத்திற்கு எதிரான ஒரு குற்றம் என்ற அங்கீகாரம் இம்மனப்பாங்கினை சற்று விலக்க உதவும். மேலும் பாலியல் வல்லுறவு மீதான கவனத்தின் காரணமாக மற்றைய பாலியல் வன்முறை சம்பவங்கள் விசாரணைக்குட்படுத்தப்படாமல் போவதாகும். சர்வதேச சட்டம் பாலியல் வல்லுறவை, பலவந்தமாக உள்நுழைத்தல் (invasive penetration) என்ற வரைவிலக்கணத்தை வழங்குவதன் மூலம் இப்பிரச்சனையை ஒருவாறு தீர்க் முயல்கின்றது. சாட்சியின் விதிமுறைகள் மற்றும் முன்னைய பாலியல் வரலாற்றை பற்றி கலந்துரையாடுவதை தடைசெய்தல் என்பன பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதோடு அவர்களுக்கு முறைப்பாடு செய்வதை எளிதாக்குவதாகவும்

அமைகின்றது. பங்குகொள்வதற்கான உரிமை நடவடிக்கைமுறையில் பெண்களுக்கு ஒரு வலுவான அந்தஸ்திற்கான வழியினை வகுக்க உதவுகின்றது. உதாரணமாக பிழையான விசாரணை நடவடிக்கைகளுக்கு எதிராக குடும்பங்கள் சவால்விடுக்க முடியுமாயுள்ளது (அன்மையில் நடந்த ஒரு வழக்கில் பெண்ணின் உடலில் உள்ளாடைகள் காணப்பட்டதனால் பாலியல் தாக்குதலுக்கு அவர் உள்ளாக்கப்பட்டதற்கான தடையங்கள் இருக்கவில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது).

ICC இனால் அறிமுகப்படுத்தப்பட்ட விசாரணை செயன்முறைகளின் சுதந்திரம் இலங்கையர்களுக்கான ஒரு பயனுள்ள தராதரமாக அமைந்துள்ளது. இலங்கையின் முரண்பாட்டு சூழ்நிலையில் நடக்கும் குற்றங்கள் சம்பந்தமான விசாரணைகள் மிக மோசமாகவே நடாத்தப்படுகின்றன. இத்தருணத்தில் பல வழக்குகள் மூடிமறைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக உருகுலைந்த உடல்களை அடையாளப்படுத்துவதற்காக DNA விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கும் தருணங்களில் நீதிமன்றங்கள் அப்பரிசோதனைக்கான பணத்தொகையை பாதிக்கப்பட்டோரினது குடும்பங்கள் செலுத்துமாறு ஆணையிடுகின்றன (பிறகு இக்கட்டளை அரசு பணத்தொகையினை செலுத்துமாறு மாற்றப்பட்டது). இப்பரிசோதனையின் முடிவுகள் பொலிஸாரின் கட்டுக்காப்பில் இருப்பது மட்டுமல்லாது தேவைக்கேற்ப அவை மாற்றப்படுகின்றன.

சட்ட முன்னேற்றங்களினால் அறிமுகப்படுத்தப்படும் தராதரங்கள் இலங்கை குற்றவியல் நீதிச் செயன்முறையின் அரசியல்மயமாக்கத்தினால் எழுகின்ற பாராதூரமான பிரச்சனைகளை இனங்காண்பதற்கு உதவுவதோடு இச்செயன்முறை கட்டாயமாக செயலாற்ற வேண்டிய தராதரங்களையும் நிர்ணயிக்கிக்கின்றன.

## அமர்வு 4
## இலங்கை ICC நியதிச்சட்டத்தை வலுவாக்குவது தொடர்பான சவால்கள்

தலைமை: கிறிஸ்டின் மார்தினோ, FIDH

பேச்சாளர்: சன்ஜீவ லியனகே நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளர் - AHRC, ICC இற்கான சர்வதேச கூட்டணியின் (CICC) தெற்காசிய ஒருங்கிளைப்பாளர்

- **ICC நியதிச்சட்டத்தின் வலுவாக்கல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான பிராந்திய நிலைப்பாடு**
- **இலங்கையில் ICC நியதிச்சட்டத்தை வலுவாக்குவதிலுள்ள அரசியல் மற்றும் சட்டச் சவால்கள்: முகம்கொடுக்க வேண்டிய சில தடைகள்: ஐக்கிய நாடுகள் மற்றும் இலங்கைக்கிடையிலுள்ள தண்டனை விலக்கீட்டு இருபடை ஒப்பந்தங்கள்**

இவ்வுரையானது, முதலில் ICC நியதிச்சட்டத்தின் வலுவாக்கல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான பிராந்திய நிலைப்பாடு சம்பந்தமான மீளாய்வை வழங்கியது. இவை சம்பந்தமான பதிவுகள் அரசியல் நோக்கம்மின்மை மற்றும் தேவையான வளங்கள் இன்மை ஆகிய காரணங்களால் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. உரோம நியதிச்சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் அதனால் அவர்களின் குற்றவியல் நீதி செயன்முறைகளில் பாரியளவிலான சட்ட சீர்திருத்தங்களை செய்வதற்கு தேவையான பெறும் செலவினை சில நாடுகளால் தாங்க முடியாதிருக்கின்றது. இதற்கு மேலாக இந்நாடுகள் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அழுத்தத்தையடுத்து தண்டனை விலக்கீட்டு இருபடை ஒப்பந்தங்களை ஏற்கனவே கைச்சாத்திட்டிருப்பதனால் இதன்படி இந்நாடுகளில் வேலை செய்கின்ற ஐக்கிய நாடுகளின் பிரஜைகள் மற்றும் ஒப்பந்ததாரிகள் ICC இன் முன் விசாரிக்கப்படுவதை தடுக்கின்றது.

திரு. லியனகே சிவில் சமூகத்திலிருந்து வளங்கள் (பணம், அறிவு) இல்லாத காரணத்தால் அழுத்தம் செலுத்துவதற்கு இயலாது போவது அரசின் மீதும் அழுத்தம் செலுத்த முடியாது போவதற்கு சமனாகும். ICC இனை எவ்வாறு எமக்கு முக்கியமானதொன்றாக மாற்றுவதே கேள்வியாகும். இன்று காலை நடந்த உரையானது இது சம்பந்தமான சில முக்கிய அம்சங்களை வெளிகொனர்ந்தது. பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் உரோம நியதிச்சட்டத்தினால் எவ்வாறு பயனடைகின்றன என்பதன் மேல் எங்கள் கவனத்தை மையப்படுத்துவதன் மூலம் எங்கள் ஆலோசணை நடவடிக்கைகளை அதன் மூலம் தொடருவதற்கு சாத்தியமாகும் என குறிப்பிட்டது.

### அமர்வுகள் 3 மற்றும் 4 சம்பந்தமான கலந்துரையாடல்
கலந்துரையாடலின் தொடக்கம் மீண்டும் நடைமுறைப்படுத்தல் விடயங்களிலே கவனம் செலுத்தியது. இதிலிருந்து படிப்படியான பேச்சாளர்கள் சிலர் உரோம நியதிச்சட்டத்தை பற்றியும் ஏன் அரசு அதை இணைக்க விரும்பவில்லை என்பதையும் ஆராய்ந்தன. சிவில் சமூகத்தின் வலுவற்றத்தன்மையே பொது அபிப்பிராயமாக காணப்பட்டது. ICC மற்றும் இலங்கையில் அது எவ்வாறு பொருந்தும் என்ற தகவலை பரந்தளவில் கிடைக்கப்பெறுவதை இதற்கெதிரான முதல் கட்ட நடவடிக்கையாகும் என்பது கலந்துரையாடப்பட்டது.

## இறுதி குறிப்புகள் மற்றும் முடிவுரை

சர்வதேச குற்றவியல் நீதி மற்றும் மனிதாபிமான சட்டம் என்பவை தொடர்பான குறிப்பிட்டளவிலான தகவல்களை மட்டுமே அறிந்திருந்தமையால் இப்பட்டறை மிகவும் சுவாரசியமானதாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தது. இரு நாட்களிலும் நடந்த கலந்துரையாடலில் இவர்களுக்கு தகவலை அணுகுவதற்கு மட்டுமின்றி அவர்கள் செயற்படும் விடயங்கள், செயற்படும் முறை மற்றும் IHL, சர்வதேச குற்றவியல் சட்டம் ஆகியவற்றை இச்செயற்பாடுகளில் பிரயோகிக்கும் விதம் பற்றியும் பகிர்ந்து கொள்வதற்கு சாத்தியமாக இருந்தது. பங்குபற்றியோர் FIDH ஒரு உள்நாட்டு நிறுவனங்களின் வலைபின்னலாகுவது சம்பந்தமாகவும் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். பட்டறையின் போது கிடைக்கப்பெற்ற தகவல்களை பகிர்தல் மற்றும் வலைபின்னல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் சம்பந்தமாக புதிப்பிக்கப்பட்ட மும்முரம் காணப்பட்டது. பட்டறையின் போது செய்யப்பட்ட உரைகளின் கணணி வடிவம் மற்றும் ICC, சர்வதேச குற்றவியல் நீதி மற்றும் IHL, குறிப்பாக பாலியல் குற்றங்கள் மற்றும் காணாமற் போதல்கள், சம்பந்தமாக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் சம்பந்தமான சிங்கள, தமிழ் வெளியீடுகளும் பங்குபற்றியவர்களுக்கு வழங்கப்பட்டது.

வளப்பகிர்வாளர்கள் மற்றும் அவர்கள் அமர்வுகளை நடாத்திய விதமும் சுவாரசியமாக இருந்தது. உதாரணமாக, சர்வதேச மனித உரிமைகள் தராதரங்கள் மற்றும் இலங்கையில் அதன் பிரயோகம் CAT இற்கு அறிக்கையிடல் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டத்தில் புதிய தராதரங்களை பாவனைக்குட்படுத்தக்கூடிய வழிகள் போன்ற விடயங்களில் வளப்பகிர்வாளர்கள் கலந்துரையாடல்கள் மற்றும் பகிர்வுகளை ஊக்குவிப்பதற்கு முயன்றனர். பங்குபற்றிய பலருக்கு சில சுவாரசியமான பங்களிப்புகளுக்கு பாவிக்கக்கூடிய வகையிலான சூழ்நிலைகள் மற்றும் சட்டங்களின் சில அம்சங்கள் பரீட்சியமாக காணப்பட்டன. தொழில்நுட்ப அமர்வுகளுக்கு கணணி ஊடான அளிக்கை சில கடினமான புதிய விடயங்களை பங்குபற்றுநர்களுக்கு மேலும் தெளிவாக்குவதற்கு உதவின. IHL மற்றும் உலகலாவிய நியாயாதிக்கம் சம்பந்தமான அமர்வுகள் பங்குபபற்றியவர்களால் மிகவும் வரவேற்கப்பட்டன. அவர்கள் வளப்பகிர்வாளர்கள் ICC சம்பந்தமான தொழில்நுட்ப விடயங்களை மட்டுமல்லாது அதன் அரசியல் பற்றியும் கலந்துரையாட வளப்பகிர்வாளர்கள் முன்வந்ததை வரவேற்றனர்.

பின்வரும் முக்கிய பரிந்துரைகள் சம்பந்தமாக பட்டறையின் பங்குபற்றுநர்கள் இணக்கம் கண்டனர்:

- மனித உரிமை தொடர்பாக செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்டடோரின் நிறுவனங்கள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள், மாணவர்கள், தொழில் சங்கங்கள் மற்றும உரோம நியதிச்சட்டத்தை இலங்கையில் வலுவாக்குவதற்கு விரும்பும் ஏனையவர்களினதும் ஒரு வலைபின்னலை உருவாக்குதல்.
- சுதந்திரமாக அல்லது மனித உரிமைகள் சம்பந்தமான அறிவியல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ICC சம்பந்தமான பயிற்சி அமர்வுகளை ஒழுங்கு செய்தல்
- ICC சம்பந்தமான முக்கிய ஆவணங்கள் மற்றும் வெளியீடுகளை சிங்களம் மற்றும் தமிழிற்கு மொழிபெயர்த்தல்

என்பவற்றை கோரினர்.

அவர்கள் மேலும் பின்வருவனவற்றின் தேவையை அங்கீகரித்தனர்

- மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு எதிரான குற்றங்களால் பாதிக்கப்பட்டோரிற்கு காணப்படும் சர்வதேச நீதி செயன்முறைகள் மற்றும் முழு அளவிலான கருவிகளை ஆராய்தல்
- சர்வதேச நீதி செயன்முறைகள் சம்பந்தமான பயிற்சிகள்
- மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட தராதரங்களுக்கு இசையும் படி தேசிய சட்டவாக்கத்தினை கொண்டு வருவதற்கான அழுத்தத்தை கொடுத்தல்

## தொடரப்படவேண்டிய நடவடிக்கைகள்

இப்பட்டறையின் பின் LST சார்பாக பங்குபற்றியவர்கள் (காணாமற்போதல்கள் சம்பந்தமாக வழமையாக செயற்படும் குழுக்களின் வலைப்பின்னலை தவிர்ந்த) பலர் பங்கு கொண்ட காணாமற்போதல்கள் சம்பந்தமான ஒரு சந்திப்பினை ஒழுங்கு செய்தது. வலுவாக்கல் சம்பந்தமாக மேலும் செயற்படுவதற்காக ICC மற்றும் IHL சம்பந்தமாக மேலும் தகவல்களை பகிர்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

செயற்பாட்டாளர்களால் சமாதானம், மனித உரிமைகள் மற்றும் காணாமற்போதல்கள் சம்பந்தமாக நடாத்திய ஆர்ப்பாட்டத்தில் அரசாங்கத்தை உரோம நியதிச்சட்டத்தை வலுவாக்கக் கோரி முதன் முறையாக பதாதைகள் காண்பிக்கப்பட்டன.

## இணைப்புகள்

நிகழ்ச்சி நிரல்

**இலங்கையில் நீதியின் தேடல்: கொடூரமான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுக்குட்பட்டோருக்கான தேசிய மற்றும் சர்வதேச தீர்வுகள்**

**கொழும்பு, இலங்கை**

**15 - 16, யூலை 2006**

**WERC, 58 தர்மராம வீதி, கொழும்பு 6**

சனிக்கிழமை, 15 யூலை 2006

**கொடூரமான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுக்குட்பட்டோருக்கான தேசிய மற்றும் சர்வதேச தீர்வுகள்**

9:00 பங்குபற்றுநர்களின் வருகை, பதிவு செய்தல்/ நிகழ்ச்சி நிரல் மற்றும் ஆவண பொதியின் விநியோகம்

9.15 – 9.45 திறப்பு: பட்டறையின் நோக்கு மற்றும் எதிர்ப்பார்ப்புகள் பற்றிய உரை

9.45 – 11.15 அமர்வு 1

<u>சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டமும் இலங்கையும்</u>

தலைமை: கிரிஸ்டின் மார்தினோ, FIDH
பேச்சாளர்கள்: சுதர்ஷன குனவர்தன, ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கான இயக்கம்
லோனா மக்கிரகோ, சர்வதேச சட்ட நிபுணர்களின் சங்கம்
ரேனோட் கலன்ட், FIDH

- சர்வதேச மனித உரிமை செயன்முறைகள்: மனித உரிமைகள் சம்பந்தமான உலகலாவிய பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளின் சர்வதேச உடன்பாட்டு உறுப்புரை, பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் சம்பந்தமாக சர்வதேச உடன்பாட்டு உறுப்புரை (சு.கு)
- இலங்கையின் அரசியலமைப்பின் கீழுள்ள அடிப்படை உரிமைகள் (சு.கு)

10.45 – 11.00 தேனீர் இடைவேளை

- இலங்கையில் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டோருக்கான தீர்வுகள்: துன்புறுத்தலிற்கான ஐ.நா சமவாயம் மற்றும் இலங்கையில் அதன் நடைமுறைப்படுத்தல் (லோ.ம.கி) 15 நிமிடங்கள்
- சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் முக்கிய செயன்முறைகளும் தராதரங்களும் (1949 இன் ஜெனிவா சமவாயம், 1977 இன் மேலதிக வரைவேடுகள்...), இலங்கையில் அதன் வலுவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் (ரே.க) 30 நிமிடங்கள்

கலந்துரையாடல்: உள்நாட்டு தராதரங்கள் மற்றும் சர்வதேச தராதரங்களுக்கிடையிலான இடைவெளிகள், இதனை கையாளுவதற்கு தேவையான உத்திகள்

12.30 – 14.00 பகலுணவு இடைவேளை

14.00 – 16.30 அமர்வு 2

<u>சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உலகலாவிய நியாயதிக்கம் தொடர்பான அறிமுகம்</u>

தலைமை: ரமணி முத்தெட்டுவேகம
வளப்பகிர்வாளர்கள்: ரேனோட் கலன்ட், FIDH
நெஹாமா ஜயவர்தன, மனித உரிமைகள் கற்கைக்கான நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்
கதரீன் பூத், FIDH
டெல்பின் கார்லன்ஸ், FIDH

- வரலாற்று மீளாய்வு (ரே.க) 20 நிமிடங்கள்
- ICC இன் செயன்முறைகள் (நியாயாதிக்கம், ஈடுசெய்யும் தன்மை, விசை செயன்முறைகள்) (நெ.ஜ) 20 நிமிடங்கள்
- ICC இன் நியாயதிக்கத்தின் கீழுள்ள குற்றங்கள் மற்றும் குற்றவியல் சட்டத்தின் பொது அடிப்படைகள் (நெ.ஜ) 20 நிமிடங்கள்

15.00 – 15.15 தேனீர் இடைவேளை

- உலகலாவிய நியாயதிக்க செய்முறையை பாவனைக்குட்படுத்தல்: FIDH இன் அனுபவம் (க.பூ மற்றும் டெ.க) 20 நிமிடங்கள்

கலந்துரையாடல்: எமது செயற்பாடுகளில் எங்கே இவை இணைகின்றன? சர்வதேச குற்றவியல் சட்டத்தில் அன்மையில் உருவாக்கிய அடிப்படைகளை எவ்வாறு எங்கள் செயற்பாடுகளில் பயன்படுத்துவதற்கான உத்திகள்.

ஞாயிற்றுக்கிழமை, 16 யூலை 2006
**இலங்கையின் சூழ்நிலையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்: பாதிக்கப்பட்டவர்களின் பங்கு**

10.00 – 12.00 அமர்வு 3

பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள்; தீர்வுகள்: ICC, கொடூரமான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுக்குட்பட்டோருக்கான தேசிய மற்றும் சர்வதேச தீர்வுகள்

தலைமை: ரமணி முத்தெட்டுவேகம
பேச்சாளர்கள்: சுனிலா அபேயசேகர, INFORM
நெஹாமா ஜயவர்தன

- ICC இல் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் நிலைப்பாட்டின் மீளாய்வு (நெ.ஜ) 15 நிமிடங்கள்
- இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சாட்சிகளுக்கு காணப்படுகின்ற தீர்வுகள்: இலங்கை நிறுவனங்களின் மற்றும் சட்டத்தரணிகளின் அனுபவங்கள் (சு.அ) 20 நிமிடங்கள்

10.45 – 11.00 தேனீர் இடைவேளை

கலந்துரையாடல்: இவற்றில் எவ்வளவு எங்களின் தேவைக்கு உள்ளது? தற்போதைய சட்ட கட்டமைப்புக்குள் எங்களுக்கு அழுத்தம் கொடுக்ககூடிய அளவு எது? எங்களுக்கு சட்ட சீரமைப்பு தேவைப்படுகின்றதா?

12.30 – 14.00 பகலுணவு இடைவேளை

14.00 – 16.00 அமர்வு 4

இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை வலுவாக்குவது சம்பந்தமாக காணப்படுகின்ற சவால்கள்

துலைமை: கிரிஸ்டின் மார்தினோ, FIDH
பேச்சாளர்: சஞ்சீவ லியனகே, AHRC

- பிராந்தியத்தில் ICC நியதிச்சட்டத்தை வலுவாக்கல் மற்றும் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான நிலைப்பாடு
- இலங்கையில் ICC நியதிச்சட்டத்தை வலுவாக்கல் சம்பந்தமான அரசியல் மற்றும் சட்ட சவால்கள்: எதிர்கொள்ள வேண்டிய சவால்கள்: ஐக்கிய நாடுகள் மற்றும் இலங்கையிடையிலுள்ள இருபடை தண்டனை விலக்கீடு ஒப்பந்தங்கள்

கலந்துரையாடல்:
பாதிப்புகளை அடையாளங்காணல்/ தாக்கம்/ இலங்கையில் வலுவாக்கல் சம்பந்தமான தடைகள்
எவ்வாறு இது எங்களுக்கு உதவியளிக்க முடியும்?
இது சாத்தியமாகுமா?
இது பயனுள்ளதா?
வலுவாக்கலை உறுதிபடுத்துவதற்கான உத்திகள்
செயற்பாட்டு திட்டம்?

இறுதி குறிப்புகள் மற்றும் பட்டறையின் நிறைவு

## பங்குபற்றியோர்களின் விபரப்பட்டியல்

## இலங்கையில் நீதியின் தேடல்: கொடூரமான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுக்குட்பட்டோருக்கான தேசிய மற்றும் சர்வதேச தீர்வுகள்

யூலை 15 – 16, 2006

இடம்: WERC, கொழும்பு

1. அருட்திரு. தந்தை ரீட் ஷெல்டன் பர்நாந்து, துன்புறுத்தலிற்கு எதிரான மக்கள்
2. திரு. யூ. எல். ஏ யோசப்
3. திரு. ஷெல்டன் ஹாந்துவெல, காணாமற் போன மாணவர்களின் தாய் தந்தையர்களின் நிறுவனம், எம்பிலிபிட்டிய
4. திரு. எம. ஏ. பி. ஈ ரெஜ்ஜி, காணாமற் போனோர்களின் தாய் தந்தையர் மற்றும் குடும்பத்தினரின் நிறுவனம் (OPFMD)
5. திருமதி. சோமா ஹப்புகாஹாபிட்டிய, H.R.C.C
6. செல்வி. நயோமி பியதாஸஇ மனித உரிமைகளுக்கான நிறுவனம் (IHR)
7. திரு. எம். சி. எம். இக்பால்
8. திரு. எம். ஏ. ஆர் சுரங்க, MDDR
9. திரு. சுதர்ஷன குனவர்தன, MDDR
10. திரு. எச். டி. மஹேந்திர ஜயசிங்க, MDDR
11. செல்வி. நிலந்தி தேவசிங்க, மனித உரிமைகளுக்கான இல்லம்
12. செல்வி. சஜீவனி அபேயகூன், மனித உரிமைகளுக்கான இல்லம்
13. திரு. திருநாவுக்கரசு ஜனகன், மனித உரிமைகளுக்கான இல்லம்
14. செல்வி. பவாணி பொன்சேகா, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
15. செல்வி. சுபாஸ்கரி, மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு
16. செல்வி. திலானி கௌசல்யா, மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு
17. செல்வி. ஜயந்தி கரு உதும்பலே, பெண்கள் மற்றும ஊடக கூட்டணைப்பு
18. திரு. சரத் சமரசிங்க, OPFMD
19. செல்வி. கிரிஸ்டின் மார்தினோ, FIDH
20. செல்வி. கதரின் பூத், FIDH
21. செல்வி. லோனா மக்கிரகோ, சர்வதேச சட்ட நிபுணர்களின் சங்கம்
22. செல்வி. டெல்பின் கார்லன்ஸ், FIDH
23. திரு. ரெனோட் கலன்ட், FIDH
24. திரு. சஞ்சீவ லியனகே, ஆசிய மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு (AHRC)
25. செல்வி. சுனிலா அபேயசேகர, INFORM
26. செல்வி. நெஹாமா ஜயவர்தன, மனித உரிமை கற்கைக்கான நிலையம் (CSHR)

**FIDH இன் ஊடக வெளியீடு**

fidh
Fédération internationale des ligues des droits de l'Homme
ORGANISATION INTERNATIONALE NON GOUVERNEMENTALE AYANT STATUT CONSULTATIF AUPRES DES NATIONS UNIES, DE L'UNESCO, DU CONSEIL DE L'EUROPE ET D'OBSERVATEUR AUPRES DE LA COMMISSION AFRICAINE DES DROITS DE L'HOMME ET DES PEUPLES

International Federation for Human Rights
Federación Internacional de los Derechos Humanos
الفدرالية الدولية لحقوق الانسان

# ஊடக வெளியீடு

**இலங்கையில் பாதிக்கப்பட்டோர் நீதியை அணுகல்**

**கொடூரமான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுக்குட்பட்டோருக்கான தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக காணப்படும் தீர்வுகள் மீதான இலங்கை சிவில் சமூகத்தின் பார்வை**

பாரிஸ், 2006, யூலை 26. - 2006, யூலை 15, 16 ஆம் திகதிகளில், மனித உரிமைகளுக்கான சர்வதேச கூட்டமைப்பு (FIDH) மற்றும் இலங்கை அரச சார்பற்ற நிறுவனமான சட்டமும் சமூகத்திற்குமான அற நிலையமும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான கூட்டணியுடன் (CICC) இணைந்து "இலங்கையில் நீதியின் தேடல்: கொடூரமான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுக்குட்பட்டோருக்கான தேசிய மற்றும் சர்வதேச தீர்வுகள்" என்ற தலைப்பிலான பட்டறையொன்றை ஒழுங்கு செய்தது.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கெதிரான மீறல்கள் குறிப்பாக பலவந்தமாக காணாமற்போதல்கள் மற்றும் துன்புறுத்தல் போன்ற குற்றங்கள் மீதான பரந்தளவிலான தண்டனையிலிருந்து விலக்கீட்டு சூழ்நிலை மற்றும் 2002 இற்கு பின்னர் கண்டிராத ஒரு மட்டத்திற்கு கூடியுள்ள உள்நாட்டு முரண்பாட்டு சூழ்நிலை ஆகியவற்றின் மத்தியில் இந்த பயிற்சி மற்றும் தகவல் பட்டறை நடாத்தப்பட்டது. தேசிய நீதிச்செயன்முறை இக்குற்றங்களை பயனுறுதிவாய்ந்த முறையில் கவனம் செலுத்த தவறியமை மற்றும் முழு அளவில் காணப்படும் தேசிய சர்வதேச செயன்முறைகளையும் இப்பட்டறை ஆராய்ந்தது.

தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் சர்வதேச மனித உரிமைகள் செயன்முறைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் செயன்முறைகளும் இலங்கை சட்டத்தில் அவற்றின் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாகவும் இவர்கள் மீளாய்வு வழங்கினர். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் செயற்பாடு மற்றும் நியாயாதிக்கம் கலந்துரையாடப்பட்டு ஐக்கிய நாடுகள் ஒப்பந்த உறுப்புகள் மற்றும் உலகலாவிய நியாயாதிக்க செயன்முறையின் பாவனை குறிப்பாக, காணாமற்போதல்கள் மற்றும் துன்புறுத்தல் என்ற குற்றங்களும் ஆராயப்பட்டன. ICC இன் முன் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் ICC இனை வலுவாக்குவதன் மூலம் இலங்கையில் ஏற்படும் கவனம் மற்றும் சவால்கள் மேலும் தேசிய சட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களின் பங்களிப்பு, பாதுகாப்பு மற்றும் புனருத்தாரண போன்றவற்றை உறுதி செய்வதற்காக உரோம நியதிச்சட்டத்தின் முன்னேற்றகரமான ஏற்பாடுகளை இணைத்தல் ஆகியவை சம்பந்தமான பயனளிக்கும் வகையிலான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

இப்பட்டறையில் பங்குபற்றியவர்கள் பின்வரும் முக்கிய பரிந்துரைகளை மற்றும் முடிவுகளில் இணக்கம் கண்டனர்:

- மனித உரிமைகள் தொடர்பில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்டோரின் நிறுவனங்கள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள், மாணவர்கள், தொழில் சங்கங்கள் மற்றும் உரோம நியதிச்சட்டத்தை இலங்கையில் வலுவாக்குவதற்கு விரும்பும் ஏனையவர்களினதும் ஒரு வலைபின்னலை உருவாக்குதல்
- சுதந்திரமாக அல்லது மனித உரிமைகள் சம்பந்தமான அறிவியல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ICC சம்பந்தமான பயிற்சி அமர்வுகளை ஒழுங்கு செய்தல்
- ICC சம்பந்தமான முக்கிய ஆவணங்கள் மற்றும் வெளியீடுகளை சிங்களம் மற்றும் தமிழிற்கு மொழிபெயர்த்தல்
- மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு எதிரான குற்றங்களால் பாதிக்கப்பட்டோரிற்கு காணப்படும் சர்வதேச நீதி செயன்முறைகள் மற்றும் முழு அளவிலான கருவிகளை ஆராய்தல்
- சர்வதேச நீதி செயன்முறைகள் சம்பந்தமான பயிற்சிகள்
- மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட தராதரங்களுக்கு இசையும் படி தேசிய சட்டவாக்கத்தினை கொண்டு வருவதற்கான அழுத்தத்தை கொடுத்தல்

இதற்கு மேலாக FIDH குழு நீதி அமைச்சின் பிரதிநிதிகளை சந்தித்தனர். மனித உரிமைகளுக்கான அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு போன்றன ICC சம்பந்தமாக அரச அதிகாரிகளுக்கான ஒரு பயிற்சியை ஒழுங்கு செய்வதற்கு இணங்கியதோடு ICC சம்பந்தமான இடை-அமைச்சு செயற்பாட்டுக் குழுவையும் மீள் ஆரம்பிப்பதாக வாக்களித்தனர். இவற்றின் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக FIDH மிக கவனத்துடன் பின்தொடர இருக்கின்றது.

பட்டறை சம்பந்தமான அறிக்கை மிக விரைவில் கிடைக்கப்பெறும்.

# 141 மனித உரிமை அமைப்புகளை FIDH பிரதிநிதித்துவப்படுத்துகின்றது

## 141 அமைப்புகள்

அல்பேனியா - அல்பேனிய மனித உரிமைகள் குழு
அல்ஜீரியா - லீக் அல்ஜீரியென் த தி(f)ன்ஸ் தேஸ் துரொய்த் த லோம்
அல்ஜீரியா - லீக் அல்ஜீரியென் த துரொய்ட்ஸ் த லோம்
ஆர்ஜன்டினா - சென்டேரா த எஸ்துதியோ லிகாலே இ சோஷலே
ஆர்ஜன்டினா - கொமிதே த அக்சியொன் ஜூரிடிகா
ஆர்ஜன்டினா - லீகா ஆர்ஜன்டினா பேர் லொஸ் தெரிகொஸ் தெல் ஹொம்பிரே
அவுஸ்திரியா - ஒஸ்டரிஷ் லிகா பியுர் மென்சென்ரெக்தே
அசர்பைஜான் - அசர்பைஜானின் மனித உரிமை நிலையம்
பஹரயின் - பஹரயின் மனித உரிமை சமூகம்
பங்களாதேஷ் - ஒதிகார்
பெலாரூஸ் - மனித உரிமைகள் நிலையம், வியஸ்னா
பெல்ஜியம் - லிகா வூர் மென்சென்ரெக்தென்
பெல்ஜியம் - லிக் தேஸ் துரொய்த் த லோம்
பெனின் - லிக் புர் லா தி(f)ன்ஸ் தேஸ் துரொய்த் த லோம் ஒ பெனின்
பூத்தான் - பூத்தானுக்கான மனித உரிமைகளுக்கான மக்கள் மன்றம் (நேபாள்)
பொலிவியா - அசம்பிலியா பர்மனந்தே த லோஸ் தெரிகோஸ் ஹூமனோஸ் த பொலிவியா
பிரேஸில் - சென்றோ த ஜஸ்டிகா குலோபல்
பிரேஸில் - மொவிமென்டோ நசினால் த திரெய்டோஸ் ஹூமனோஸ்
புர்கினா பஸோ - மூவ்மொன்ட் புர்கினாபே தே துரொய்த் த லோம் & தே பிய்ப்பில்ஸ்
புருன்டி - லிக் புருன்டெய்ஸ் துரொய்த் த லோம்
கம்போடியா - கம்போடிய மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி சங்கம்
கம்போடியா - லிக் கம்போடியன் த தி(f)ன்ஸ் தேஸ் துரொய்த் த லோம்
கமரூன் - மெய்ஸொன் தேஸ் துரொய்த் த லோம்
கமரூன் - லிக் கமரூனெய்ஸ் தேஸ் துரொய்த் த லோம் (பிரான்ஸ்)
கனடா - லிக் தேஸ் துரொய்த் ஏ தேஸ் லிபர்தேஸ் து குபெக்
மத்திய ஆபிரிக்க குடியரசு - லிக் சென்டிராபிகன் தேஸ் துரொய்த் த லோம்
சாட் - அசோசியன் சாடியன் பூர் லா புரோமோசன் ஏ லா தி(f)ன்ஸ் தேஸ் துரொய்த் த லோம்
சாட் - லிக் சாடியன் தேஸ் துரொய்த் த லோம்
சிலே - கோபுரேஸன் த புரோமோசியன் இ தி(f)ன்ஸா த லோஸ் தெரிகோஸ் தெல் பியுப்லோ
சீனா - சீனாவில் மனித உரிமைகள் (USA, HK)
கொலும்பியா - கொமிதே பர்மனந்தே பேர் லா தி(f)ன்ஸா த லோஸ் தெரிகோஸ் ஹூமனோஸ்
கொலும்பியா - கோபுரேஸியொன் கொலக்திவோ த அபோகதொஸ் ஹோரசே அல்வியர் ரெஸ்டரெபோ
கொலும்பியா - இந்ஸ்திதுவுதோ லத்தினோ அமெரிக்கானோ த சர்விசியோஸ் லெகாலே அல்தர்னாதிவோஸ்
கொங்கோ பிரசாவில் - ஒப்சவாதுவா கொங்கோலெயிஸ் தேஸ் துரொய்த் த லோம்
குரோவேசியா - மனித உரிமைகளுக்கான மக்கள் மூகு
செக் குடியரசு - மனித உரிமைகள் கூட்டுறவு
கியுபா - கொமிஸன் கியுபானா த தெரிகோஸ் ஹூமனோஸ் இ ரிகொன்ஸிலியேசன் நசினால்
கொங்கோ ஜனநாயக குடியரசு - லிக் த இலெக்தோஸ்
கொங்கோ ஜனநாயக குடியரசு - அசோசியேசன் ஆப்ரிகையின் தேஸ் துரொய்த் த லோம்
கொங்கோ ஜனநாயக குடியரசு உ குரூப் லோடஸ்
ஜிபூட்டி - லிக் ஜிபூட்டியென் தேஸ் துரொய்த் ஹூமெய்ன்ஸ்
எகுவடோர் - கொமிசன் எகுமெனிகா த தெரிகோஸ் ஹூமனோஸ்
எகுவடோர் - பன்டேசியோன் ரிஜினல் த அசெசோரியா ஒன் தெரிகோஸ் ஹூமனோஸ்
எகிப்து - மனித உரிமைக்கான எகிப்திய அமைப்பு
எகிப்து - கைதுகளின் உதவிக்கான மனித உரிமைகள் சங்கம்
எல் சல்வடோர் - கொமிசன் த தெரிகோஸ் ஹூமனோஸ் த எல் சல்வதோர்
எத்தியோப்பியா - எத்தியோப்பிய மனித உரிமைகள் சபை
ஐரோப்பிய ஒன்றியம் - FIDH AE
பின்லாந்து - மனித உரிமைகளுக்கான பினிஸ் கூட்டுறவு
பிரான்ஸ் - லிக் தேஸ் துரொய்த் த லோம் ஏ து சித்தியோன்
பொலினீசிய பிரான்ஸ் - லீக் பொலினிசியென் தேஸ் துரொய்த் ஹூமெய்ன்
ஜீயோஜியா - மனித உரிமைகள் தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம்
ஜர்மனி - இன்டர்நசினல் லிகா பியர் மென்சென்ரெக்தே
கிரேக்கம் - லீக் ஹெலனிக் தேஸ் துரொய்த் த லோம்
கவுதமாலா - சென்டேரா பரா லா அக்சியொன் லெகால் ஒன் தெரிகோஸ் ஹூமனோஸ்
கவுதமாலா - கொமிசன் த தெரிகோஸ் ஹூமனோஸ் த கவுதமாலா
கீனியா - ஒர்கனைசேசன் கினியன் பூர் லா தி(f)ன்ஸ் த துரொய்த் த லோம்
கினியா பிசாவ் - லிகா கினென்ஸ் தோஸ் திரெய்தோஸ் தோ ஹொமென்
இரான் - சென்டர் தேஸ் தி(f)ன்சோர் தேஸ் துரொய்த் த லோம் ஒன் இராக்
இரான் (பிரான்ஸ்) - லிக் த தி(f)ன்ஸ் தேஸ் துரொய்த் த லோம் ஒன் இராக்
இராக் - மனித உரிமை கலாச்சாரம் மற்றும் அபிவிருத்திக்கான இராக்கிய வலைப்பின்னல் (ஐக்கிய இராஜ்ஜியம்)
அயர்லாந்து - மக்கள் சுதந்திரத்திற்கான ஐரிஷ் சபை
இஸ்ரயில் - அதாலா
இஸ்ரயில் - இஸ்ரயில் மக்கள் உரிமைகளுக்கான சபை
இஸ்ரயில் - ப'செலம்
இஸ்ரயில் - இல்ரயில் துன்புறுத்தலிற்கு எதிரான பொது சபை
இதாலி - லிகா இதாலியானா தெல் திரிட்டி தெல் உ'மோ
இதாலி - யுனியன் பொரென்ஸ் ப துதெலா தெய் திரிட்டி தெல் உ'மோ
ஐவரி கோஸ்ட் - லிக் ஐவரியெண் தேஸ் துரொய்த் த லோம்
ஜோர்தான் - அமான் மனித உரிமை கற்கைக்கான நிலையம்
ஜோர்தானி - ஜோர்தான் மனித உரிமை சமூகம்
கென்யா - கென்யா மனித உரிமை ஆணைக்குழு
கொசொவோ - கொன்செய் பூர் லா தி(f)ன்ஸ் தேஸ் துரொய்த் த லோம் ஏ தேஸ் லிபர்தேஸ்
கிரிகிஸ்தான் - கிரிக் மனித உரிமை சபை
லாவோஸ் - மூவ்மன்ட் லாவோ பூர் லே துரொய்த் த லோம் (பிரான்ஸ்)
லட்வியா - லட்வியன் மனித உரிமை சபை
லெபனன் - அசோசிசேன் லிபனெய்ஸ் தேஸ் துரொய்த் த லோம்
லெபனன் - லெமனனின் மனித் மற்றும் மனிதாபிமான உரிமைகளுக்கான நிலையம்
லெபனன் - பெலஸ்தினியன் மனித உரிமை அமைப்பு
லைபீரியா - லைபீரிய மனித உரிமை கண்காணிப்பகம்
லிபியா - லிப்பிய மனித உரிமை கூட்டுறவு (சுவிட்ஸலாந்து)
லிதுவேனியா - லிதுவேனிய மனித உரிமைகள் சபை
மலேசியா - சுவராம்
மாலி - அசோசிசேன் மாலியெண் தேஸ் துரொய்த் த லோம்
மால்டா - மால்டா மனித உரிமைகள் சபை
மொரிடேனியா உ அசோசிசேன் மொரிடேனியன் தேஸ் துரொய்த் த லோம்
மெக்சிகோ - கொமிசன் மெக்சிகானா பேர் லா தி(f)ன்ஸா த லோஸ் தெரிகோஸ் ஹூமனோஸ்
மொல்டோவா - மனித உரிமைகளின் பாதுகாப்பிற்கான கூட்டுறவு
மொரொக்கோ - ஒர்கனைசேசன் மொரகெய்ன் தேஸ் துரொய்த் ஹூமெய்ன்
மொரொக்கோ - ஒர்கனைசேசன் மொரொகெய்ன் தேஸ் துரொய்த் ஹூமெய்ன்ஸ்
மொசம்பிக் - லிகா மொகம்பிகானா தொஸ் திரைத்தோஸ் ஹூமெனொஸ்
நெதர்லாந்து - லிகா வூர் த ரெக்தன் வன் த மென்ஸ்
புது கலடோனியா - லிகா தேஸ் துரொய்த் த லோம் த நுவோ கலடோனி
நிகராகுவா - சென்டேரா நிகராகயுன்ஸ் த தெரிகோஸ் ஹூமனோஸ்
நிக - அசோசியன் நய்ஜீரியன் பூர் லா தேஸ் தி(f)ன்சோர் தேஸ் துரொய்த் த லோம்
நய்ஜீரியா - மக்கள் சுதந்திர அமைப்பு
வட அயர்லாந்து - நீதி நிர்வாகத்திற்கான சபை
பாகிஸ்தான் - பாகிஸ்தானிய மனித உரிமைகள் ஆணைக்குழு
பலஸ்தீன் - அல் ஹக்
பலஸ்தீன் - பலஸ்தீனிய மனித உரிமைகள் நிலையம்
பனாமா - சென்ட்ரோ த கபாசிடேசியோன் சோஷல்
பெரு - அசோசியேசன் புரோ தெரிகோஸ் ஹூமனோஸ்
பெரு - சென்டேரா த அசெசோரியா லபோரால்
பிலிப்பின்ஸ் - பிலிப்பினிய மனித உரிமை ஆலோசகர்களின் கூட்டிணைப்பு
போர்த்துகல் - சிவிடாஸ்
ரோமானியா - லிக் பூர் லா தி(f)ன்ஸ் தேஸ் துரொய்த் த லோம்
ருசியா - பிரஜைகளின் கண்காணிப்பகம்
ருசியா - மொஸ்கொவ் மனித உரிமைகளுக்கான ஆராய்ச்சி நிலையம்
ருவான்டா - அசோசியேசன் பூர் லா தி(f)ன்ஸ் தேஸ் பெர்சொனே ஏ லிபர்தேஸ் புப்லீக்
ரூான்டா - கொலெக்திப் தேஸ் லிக்ஸ் பூர் லா தி(f)ன்ஸ் தேஸ் துரொய்த் த லோம் தேஸ் துரொய்த் ஒ ருவான்டா
ருவான்டா - லீக் ருவான்டைஸ் பூர் லா புரொமேசியன் ஏ லா தி(f)ன்ஸ் தேஸ் துரொய்த் த லோம்
ஸ்கொட்லாந்து - ஸ்கொடிஷ் மனித உரிமை நிலையம்
செனகால் - ஒர்கனைசேசன் நசினால் தேஸ் துரொய்த் த லோம்
செனகால் - ரிகொன்த்ரே ஆப்ரிகைன் பூர் லா தி(f)ன்ஸ் தேஸ் துரொய்த் த லோம்
சர்பியா மற்றும் மொன்டினெக்ரோ - யுத்த எதிர் செயற்பாட்டிற்கான நிலையம் - மனித உரிமைகளுக்கான சபை
தெற்கு ஆபிரிக்கா - தெற்கு ஆபிரிக்க மனித உரிமை சபை
ஸ்பெயின் - அசோசியேசன் புரோ தெரிகோஸ் ஹூமனோஸ்
ஸ்பெயின் - பெடரேசியொன் த அசோசியொன்ஸ் த தி(f)ன்ஸா இ புரொமோசியன் த லோஸ் தெரிகோஸ் ஹூமனோஸ்
சுதான் - சுதான் துன்புறுத்தலிற்கு எதிரான அமைப்பு (ஐக்கிய இராஜ்ஜியம்)
சுவிட்ஸலாந்து - லிக் சுயிஸ் தேஸ் துரொய்த் த லோம்
சிரியா - கொம்தே பூர் லா தி(f)ன்ஸா தேஸ் துரொய்த் த லோம் ஒன் சிரி
தன்சனியா - சட்ட மற்றும் மனித உரிமை நிலையம்
தாய்லாந்து - மக்கள் சுதந்திரத்திற்கான ஒன்றியம்
டோகோ - லிக் டோகோலைஸ் தேஸ் துரொய்த் த லோம்
துனிசியா ¸ கொன்செய் நசினெல் பூர் லே லிபர்தேஸ் ஒன் துனிசியா
துனிசியா - லிக் துனிசியென் தேஸ் துரொய்த் த லோம்
துர்கி - துர்கிக்கான மனித உரிமைகள் நிலையம்
துர்கி - இன்சான் ஹக்லாரி தெர்நெகி; அங்காரா
துர்கி - இன்சான் ஹக்லாரி தெர்நெகி/ தியார்பகீர்
உகன்டா – மனித உரிமை முன்னெடுப்புக்கான நிலையம்
ஐக்கிய இராஜ்ஜியம் - லிபர்த்தி
ஐக்கிய அமெரிக்கா – அரசியலமைப்பு உரிமைகளுக்கான நிலையம்
உஸ்பகிஸ்தான் - சட்ட உதவி சமூகம்
வியட்நாம் - கொமிதே வியட்நாம் பூர் லா தி(f)ன்ஸ் தேஸ் துரொய்த் த லோம் (பிரான்ஸ்)
யெமன் - மனித உரிமைகள் தகவல் மற்றும் பயிற்சி நிலையம்
யெமன் - சகோதரிகளின் மனித உரிமைக்கான ஆராபிய பொது மன்றம்
சிம்பாப்வே – சிம்பாப்வே மனித உரிமை சபை – சிம்ரைட்ஸ்

1948 இன் மனித உரிமைகளின் சர்வதேச பிரகடனத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு உலகலாவிய மனித உரிமைகளுக்கான பாதுகாப்பிற்காக அர்ப்பனிக்கப்பட்ட மனித உரிமைகளுக்கான சர்வதேச கூட்டமைப்பு (**FIDH**) ஒரு சர்வதேச அரச சார்பற்ற அமைப்பாகும். 1922 ஸ்தாபிக்கப்பட்ட **FIDH** எல்லா பிராந்தியங்களிலும் 141 இணை நிறுவனங்களை கொண்டுள்ளது. இற்றைவரை, **FIDH** ஆயிரத்திற்கும் மேலான சர்வதேச உண்மையை கண்டறிவதற்கு மற்றும் நீதிச்சேவை, மத்தியஸ்த அல்லது பயிற்சி விஜயங்களை நூற்றுக்கணக்கான நாடுகளில் நடாத்தியுள்ளது.


**LST** – சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அற நிலையம்
இல.3, கின்சி றெரஸ்
கொழும்பு – 08
இலங்கை
தொலைபேசி: 94 11 2684845/ 2691228
பெ(*f*)க்ஸ்: 94 11 2686843
**www.lawandsocietytrust.org**

**FIDH** - மனித உரிமைகளுக்கான சர்வதேச கூட்டமைப்பு
17, பசேஜ் த லா மெங் த'ஓர் உ 75011 பரிஸ், பிரான்ஸ்
**CCP** பரிஸ்: 76 76 **Z**
தொலைபேசி: (33-1) 43 55 25 18/ பெ(*f*)க்ஸ்: (33-1) 43 55 18 80
மின்அஞ்சல்: **fidh@fidh.org**
**www.fidh.org**



இவ்வெளியீட்டின் பணிப்பாளர்: சிதிக்கி கபா
ஆசிரியர்: அன்டொயின் பர்னாட்
ஆறிக்கையாசிரியர்கள்: சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அற நிலையம், **FIDH**
ஒருங்கிணைப்பு: இசாபெல் பிரசே, டெல்பீன் கார்லன்ஸ்
வெளியீட்டிற்கான உதவி: செலீன் பலரோ-தெது
**ISSN en cours. N° 467/2 – Printing by the FIDH**
**Dépot legal January 2007 – Commission paritaire N° 0904P11341**
**Fichier informatique conforme à la loi du 6 janvier 1978**
**(Déclaration N° 330 675)**